மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 10 சுற்றம் : 10 / அக்டோபர் 2020 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-




## கருணாஸ் எம்.எல்.ஏ., பாசகவில் இணைகிறாரா?

### சேது.கருணாஸ் நேர்காணல்



800 முத்தையா முரளிதரன் திரைப்படத்தில் விஜய்சேதுபதி நடிக்கக் கூடாது இயக்குநர் பாரதிராஜா வேண்டுகோள்!



முதலமைச்சர் வேட்பாளர்


வலைத் தளத்தில்
வாழ்வியல்
சொல்லும்
களம்...
பாருங்கள்!
முற்றம்
MUTRAM TV
இணைய தொலைக்காட்சி

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly October 2020

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி**
இணை ஆசிரியர்
பேராசிரியர் **அப்பாத்துரை**
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சைதை மணிமாறன்**
**தமிழரசு** மதுரை
**செபாஸ்டின்** திருச்சி
**ஜான் ஜெயராமன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**ஆ.சிரோன்மணி**
**முருகன் தேவேந்திரன்**
**ஜான்ஜெனோவா ஜெர்லின்** திருச்சி
**ராஜா சாக்ரட்டீஸ்** தஞ்சை
**அ. இரா. முல்லைக்கோ** பெங்களூர்
நிர்வாகம்
**மணிகண்டன்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**ஆபிரகாம் லிங்கன்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச : 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

முதலமைச்சர் வேட்பாளர்
– தலையங்கம்.................................................... 4

இன அழிப்பு
– கிறிஸ்டோபர்.................................................... 6

நாடகக் கொட்டாய் முதல்
சினிமாக் கொட்டாய் வரை (8)
– பூவை தயா.................................................... 9

வாங்கருவா (சிறுகதை)
– இருங்கோவேள்.................................................... 11

மீனவர் போராட்டம்.................................................... 15

சமற்கிருதம் ஒரு மொழியே இல்லை.................................................... 17

தமிழக அரசு வரைவுகள்.................................................... 19

புனித ஜார்ஜ் கோயில் வரலாறு.................................................... 21

முழுமையான உயிர்பெறாத ஒரு அரைகுறை
உயிரி கொரோனா
– பி. மணி....................................................22

தொல்தமிழர் சின்னங்கள் கிடைத்த சோழன் மாளிகை
– பெ. மணியரசன்.................................................... 25

சேது சமுத்திரத் திட்டம் 150 ஆண்டு வரலாறு.................................................... 26

கருணாஸ் எம்.எல்.ஏ., பாசகவில் இணைகிறாரா?
கருணாஸ் நேர்காணல்.................................................... 28

800 திரைப்படத்தில் விஜய்சேதுபதி நடிக்கக் கூடாது
இயக்குநர் பாரதிராஜா வேண்டுகோள்.................................................... 31

வேகமாய் அழிந்து வரும் கழுகுகள்.................................................... 32

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# முதலமைச்சர் வேட்பாளர்!

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்ற கேள்விக்கு, முன்பு சொன்னபடியே ஏழாம் தேதி விடை கொடுத்திருக்கிறார்கள் அதிமுக நிருவாகிகள். பெரும்பாலானவர்கள் எதிர்பார்த்தபடியே தற்போதையை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கே அத்தகுதி உண்டு என்பதை அஇஅதிமுக நிருவாகம் முடிவு செய்திருக்கிறது.

இரண்டு மூன்று நாட்களாகவே பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த அதிமுக, முதலமைச்சர் வேட்பாளர் அறிவிப்பால் ஒரு சமநிலைக்கு வந்துள்ளதாகவே கருதலாம். ஜெயலலிதா மறைந்த பிறகு ஏற்பட்ட சிக்கல்கள், அதன்பின்னால் மாண்புமிகு பழனிச்சாமி முதல்வராக பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் இந்த ஆட்சி இரண்டு மாதங்களில் கவிழ்ந்து விடும், ஆறு மாதங்களில் கவிழ்ந்து விடும் என்று ஆருடம் கூறிய ஆட்களெல்லாம், நாங்களா அப்படிச் சொன்னோம்? இருக்காது, ஒருவேளை எங்கள் அட்மின்கள் சொல்லியிருக்கலாம் என்று சொல்லி நழுவிக் கொள்கிற அளவுக்கு, மிகவும் சாமர்த்தியமாக தனது ஆட்சிக் காலத்தை தொடர்ந்து கொண்டிருக்கிற முதல்வரை, அவருக்கு எதிர் முகாம்களில் இருப்போரும் பாராட்டுகின்றனர் என்றே சொல்ல வேண்டும்.

அவருக்கு அதிர்ஷ்டம் என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால், முதலமைச்சரின் நிருவாகத் திறமையே அவரை இந்நிலைக்கு உயர்த்தியிருக்கிறது என்பதற்கு யாராலும் எதிர்க்கருத்துகளை முன்வைக்க முடியாது. தமக்கெதிராக இருந்த கட்சி நிருவாகிகள் ஒவ்வொருவராக தன் பக்கம் இழுத்துக் கொண்ட, ஈர்ப்பு ஆளுமையாக மாறியிருக்கிறார் முதல்வர். இந்திய ஒன்றிய அரசோடு சில நேரங்களில் முரண்பட்டும், சில நேரங்களில் ஒத்திசைந்தும் ஆட்சித் தேரை மிக இலாகவமாக செலுத்திக் கொண்டிருக்கிறார் என்றே அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

ஒன்றிய அரசின் திட்டங்களால், தமிழகத்தில் ஏற்படும் கொந்தளிப்புகளை சரி செய்வதிலும், இந்திய ஒன்றிய அரசின் கட்டாயத்தின் பேரில், தமது பெயரில் வெளிவருகின்ற திட்டங்கள், செயல்படுத்துமுறைகள் தொடர்பான எதிர்ப்புகளைச் சமாளிப்பதிலும் திறமையாகச் செயல்பட்டு வருகிற எடப்பாடியார் அவர்களுக்கு, நிருவாகத்திறமைக்கான நோபல் பரிசே கொடுக்கலாம் என்ற அளவிற்குச் செயல்பட்டு வருகிறார்.

பொதுமக்களின் கண்ணோட்டத்தில் சில குறைகள் சொல்லப்பட்டாலும்கூட, இந்த மனிதர் இத்தனை சிக்கல்களையும் எதிர்கொண்டு ஆட்சியைத் திறம்பட நடத்துகின்றாரே என்ற வியப்பு மேலோங்கி நிற்கத்தான் செய்கிறது.

கட்சியினரால் முதலமைச்சர் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற எடப்பாடி பழனிச்சாமி அவர்கள், தமிழக மக்களால் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்படுவாரா? 2021 தமிழக சட்டமன்றத் தேர்தல்தான் பதில் சொல்லும்.



கடந்த 1992ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் நாள் கரசேவகர்கள் பாபர் மசூதியை இடித்தனர். அச்செயல் தொடர்பான எல்லாச் செய்திகளையும் படங்களையும் மக்களுக்கு கொண்டுபோய்ச் சேர்த்தன. பாபர் மசூதி இடிப்பு தொடர்பாக பாசகவின் மூத்த தலைவர்கள் அத்வானி, முரளி மனோகர் சோசி, உமாபாரதி, கல்யாண்சிங், வினஸ் கட்டியார், சாக்சிமகராச் உள் ளிட்ட 49 பேர்கள் மீது சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்தது. இந்த வழக்கில் இருந்து அத்வானி உள்ளிட் டோரை விடுவித்து, 2001ஆம் ஆண்டு விசாரணை நீதிமன்றம் உத்தரவிட்டது. அதை அலகாபாத் உயர்நீதிமன்றம் 2010ஆம் ஆண்டு உறுதி செய்தது. ஆனால் இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் சி.பி.ஐ. மேல் முறையீடு செய்ததன் பேரில், அத்வானி உள்ளிட்டோர் மீது மீண்டும் வழக்கு விசாரணையை நடத்த 2017ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் நாள் உச்சநீதிமன்றம் உத்தர விட்டது.

ரேபரேலி நீதிமன்றத்தில் நடந்து வந்த வழக்கு விசாரணையை, லக்னோவில் உள்ள யோத்தில் விவகாரங்களுக்கான சி.பி.ஐ. தனிக்கோர்ட்டுக்கு மாற்றி தினசரி விசாரணை நடத்தி, விரைவாக வழக்கில் தீர்ப்பு வழங்குமாறு உச்சநீதிமன்றம் உத்தவிட்டது. இந்த வழக்கில் சாட்சியங்களை பதிவு செய்தல், குறுக்கு விசாரணை நடத்துதல் ஆகியவற்றை இரண்டு ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்று கடந்த 2017ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் நாள் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது. பின்னர் ஆகஸ்டு 31ஆம் நாளுக்குள் விசாரித்து முடிக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தர விட்டது.

ஆனால், மேலும் ஒரு மாதம் அவகாசம் வழங்க வேண்டும் என்று லக்னோ சி.பி.ஐ. தனி நீதிமன்றம் நீதிபதி எஸ்.கே.யாதவ் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அதையும் உச்சநீதிமன்றம் வழங்கியது. விசார ணையை விரைவாக முடித்து செப்டம்பர் 30ஆம் நாளுக்குள் தீர்ப்பை அறிவிக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தது. அதன்படி, லக்னோ சி.பி.ஐ. தனி நீதிமன்றம், நீதிபதி எஸ்.கே.யாதவ் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. குற்றம் சுமத்தப்பட்ட 49 பேரில் சிவசேனா நிறுவனர் பால் தாக்கரே, விசுவ இந்து பரிசத் தலைவர் அசோக் சிங்கால், பாசக மூத்த தலைவர் விஜயராஜே சிந்தியா உள்ளிட்ட 17 பேர் வழக்கு நீதிமன்ற விசாரணையில் இருந்தபோதே உயிரிழந்து விட்டனர் என்பது குறிப் பிடத்தக்கது.

இந்த வழக்கில் சி.பி.ஐ. தரப்பில் 351 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 600 ஆவணங்கள் தாக்கல் செய் யப்பட்டன. கடந்த 16ஆம் நாள் இந்த வழக்கில் விசாரணை நிறைவடைந்தது. இதையடுத்து தீர்ப்பு 30ஆம் நாள் அறிவிக்கப்படும் என்று கூறப்பட்டது. அதன்படி நீதிபதி. எஸ்.கே.யாதவ், பாபர் மசூதி இடிப்பு வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக போதிய ஆதாரம் இல்லையாதலால், இவர்கள் விடுவிக் கப்படுகிறார்கள் என்று தீர்ப்பு வழங்கினார்.

சைதை **மணிமாறன்**



# உலகறிந்த குற்றச்செயல்! ஆதாரம் இல்லை நீதிமன்றம்?



# இன அழிப்பு!

உலகம் எங்கும் நடந்து முடிந்த இன அழிப்பு போர்களுக்குப் பின்னாலும் நடந்து கொண்டிருக்கும் இன அழிப்பு நிகழ்வுகளும் வரலாற்றில் கறை படிந்த தடயங்களாக காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன.

இன அழிப்பு என்ற ஒற்றைச் சொல்லுக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் கொடூரமான நிகழ்வுகள், நிகழ்த்திய கொடுங்கோல்கள் பற்றி ஆதாரங்கள் வரலாற்றில் கொட்டிக் கிடக்கின்றன.

தங்களின் பேராசைக்கும் சுயநல போக்குக்கும் பிற உயிர்களை அழித்து அதில் ஆனந்தம் கொள்ளும் இழி பிறவிகளை உலகம் உற்றுப் பார்த்தே வந்து கொண் டிருக்கிறது.

மனித நேயத்தின் கால்களுக்கடியில் சிக்கிச் சீரழிந்து மிதிபட்டுக் கிடக்கும் இன அழிப்பு எச்சங் களில், அதனை நிகழ்த்தவதற்கு எத்தகைய கொடூர வழிமுறைகளை அவர்கள் உருவாக்கினார்கள் என்பதும் வரலாற்றில் பதியப்பட்டிருக்கின்றன.

வகைவகையான கொடூரங்களை ஆயுதங்களாக்கி, திட்டமிட்டு அவற்றின் வழியாக பல உயிர்கள் பலியாக்கப்பட்டிருக்கிறது.

1944 மே மற்றும் ஜூன் மாதங்களில், ஜெர்மனியின் ஆஸ்சுவிட்ஸ் வதை முகாமில் ஓர் தேர்வு நடை பெற்றது. இராணுவத்திற்கான ஆள் சேர்ப்பு தேர்வல்ல அது. இராணுவத்தைக் கொண்டு யூதர்களை அழித் தொழிப்பதற்காக ஹிட்லர் நடத்திய தேர்வுதான் அது. பிடிபட்ட யூதர்களும் சோவியத் போர்க் கைதிகளும் ரோமானியர்களும் இன்னும் பல வகையான மனித உயிர்களும் முகங்களிலே கலவரத்தோடு அந்த வதை முகாம்களில் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தனர்.

இந்த மனித உயிர்கள் கொல்லப்படுவதற்காக, மந்தை ஆடுகளைப் போல குவியல் குவியலாக நிறுத் தப்பட்டிருந்தனர். தங்களை என்ன செய்யப் போகிறார்கள்? என்பது கூட அறியாமல் அங்கே கலவரத்தோடு நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் வகை வகையாக முகாம்களிலே பிரிக்கப்பட்ட போது கூட செய்வதறியாது திகைத்து நின்ற அவர்களின் மன உளைச்சலை, அதனால் பாதிக்கப்பட்ட ஒருவனால் மட்டுமே உணர முடியும்.

இலங்கையில் தமிழ் இன அழிப்பு நிகழ்ந்ததற்கு இணையான கொடுமை அது.

நாஜி ஜெர்மனியிலுள்ள அவுஸ்விட்ச் என்ற ஒஸ்வியேச்சிம் என்ற இடத்தில்தான் அந்த வதை முகாம் நிறுவப்பட்டிருந்தது. பிர்க்கெனாவு என்றோரு மற்றொரு பெயரும் அதற்கு உண்டு. இன்னும் விளக்கமாக நம் மொழி அதனை 'கொலை முகாம்' என்று தெரிவாகச் சொல்லுகிறது.

இதன் பொறுப்பாளர்களாக இருந்தவர்கள் தான் ருடெல்ப் ஹஸ் மற்றம் ஆர்த்தர் விப்கென்சே. இராணுவக் குடியிருப்பு என்றே இந்தக் கொலைக் களத்திற்கு மாற்றுப் பெயர் வைத்து, உலகத்திற்குத் தெரியாமல் பெயரை பூசி மறைத்திருக்கிறார்கள் நாஜிகள். இந்தக் கொலைக் களம் 3 முக்கியப் பிரிவு களாக பிரித்து கட்டமைக்கப்பட்டிருந்தது. முதல் பகுதி நிர்வாக மையம். இரண்டாவது பகுதி, அதாவது பிர்கெனாவு என்ற கொலைக்களம் மூன்றாவது பகுதி மொனோவிட்ஸ் என்ற தொழிற் பகுதி. முதல் இரண்டு பகுதிகள் உலக பாரம்பரிய களத்தில் பதிவு செய்யப் பட்டு இன அழிப்புக்கான தடயத்தை உறுதி செய்துள்ள அடையாளமாக நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

இந்த வதை முகாமைச் சுற்றிலும் 43 கி.மீட்டர் சுற்றளவிற்கு ஏறத்தாழ 40 சிறு முகாம்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

இந்த முகாம்களின் நேரடிப் பார்வையாளன்தான் ரூடொல்ப் ஹஸ். ஹிட்லரின் நம்பிக்கைக்குரிய விசுவாசி. இப்படிப்பட்ட விசுவாசிகள் கொடுங்கோலர் களின் கண் அசைவிற்கு காத்திருந்து மௌனமாக காரியத்தை முடிப்பதில் கச்சிதமானவர்கள். கிட்டத் தட்ட சுமார் 3 மில்லியன் மக்கள் இம்முகாமில் ரூடெல்பின் மேற்பார்வையில் கொல்லப்பட்டதாக வரலாறு பதிவு செய்திருக்கிறது. இவர்களில் 90 விழுக் காட்டினர் யூதர்கள். மீதி பத்து விழுக்காட்டினர் அரசியல் அதிருப்தியாளர்கள். சோவியத் போர்க் கைதிகள், நாடோடிகள், ஊனமுற்றவர்கள் என்று வரலாற்றுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது.

உழைக்கக்கூடிய உடல் உறுதியானவர்கள், உழைக்க முடியாதவர்கள், உயிரியல் மருத்துவப் பரிசோதனைக்கு பயன்படக் கூடியவர்கள் என்று வகை வகையாகப் பிரித்து வைத்து ஆள்தேர்வு செய்தார்கள். இந்த வகையில் மீதி இருப்பவர்கள் ஓர் அறையில் அடைக் கப்பட்டார்கள். குழந்தைகள் தயாய்மார் களிடமிருந்து பிரிக்கப்பட்டு, வயதான பெண்களுடன் சேர்த்து நச்சுவாயு அறைக்குள் அனுப்பப்பட்டார்கள். மூச்சு முட்ட நச்சுக்காற்று நிரப்பப்பட்டு அறைகள் அடைக் கப்பட்டன. அறைகள் எழுந்தன ஓலங்கள். அந்த ஓலங்களைத் தாண்டி அறைக்குள் நச்சுப் பாம்பாக உள்ளுக்குள் ஊடுருவியது சைக்ளோன்பி. அறைக்குள் பரவிய உயிரியல் ஆயுதமான பூச்சிக் கொல்லி சைக்ளோன் பியை சுவாசித்து, மனித உயிர்களும் அறைக்குள் பிணமாகிப் போனவர்கள்.

நாசிக்களை துவம்சம் செய்வதற்காக சோவியத் படைகள் கொலைக் களத்திற்குள் நுழைந்தபோது, தாங்கள் செய்த கொடுமைகளை மறைப்பதற்காக, நச்சு வாயு அறைகளை குண்டு வைத்து தகர்த்தார்கள் நாசிக்கள். தப்பிக்க நினைத்த நாசிக்களை தரையில் போட்டு நசுக்கியது சோவியத் இரும்பு இராணுவக் காலணிகள். இதுபற்றி விசாரணை தொடங்குவதற்கு முன்பே ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டான். இன அழிப்பைச் செய்தவரின் இறுதி மூச்சு எப்படி நின்று போகும் என்பதற்கு ஹிட்லர் ஒரு எடுத்துக்காட்டு.

செவ்விந்தியர்கள், அமெரிக்காவின் பூர்வ குடிகள். ஒரு இனத்தை அடக்கி, ஒடுக்கி, இன அழிப்பை வெற்றிகரமாக செயல்படுத்தியது வரை, ஒரு இனம் பாதிப்படைந்திருக்கிறது என்றால் அது செவ்வியந்தியர்கள் என்ற இனமாகத்தான் இருக்க முடியும். அமெரிக்க மண்ணின் உண்மையான சொந்தக்காரர்கள் என்று உலக வரலாற்றில் செவ்விந்திர்கள் பற்றி பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மன்னர், அலாஸ் காவும் ஆசியக் கண்டமும் ஒரே நிலப்பரப்பாக இருக்கும்போது, ஆசியாவில் இருந்து இடம் பெயர்ந்து, இந்த செவ்விந்தியர்கள் அலாஸ்கா வழியாக அமெரிக்கா சென்றிருக்க வேண்டும். அங்குள்ள நிலப்பரப்புகளிலே பரவி செவ்விந்தியர்கள் இனம் உருவாகியது என்று அராய்ச்சிக் குறிப்பு ஒன்று சொல்கிறது. இவர்கள்தான் அமெரிக்காவின் பூர்வகுடிமக்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இங்கிலாந்தின் கண்களில் படும்வரை இவர்கள் அமைதியாக சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தார்கள் இந்தியர்களைப்போல.

இங்கிலாந்துக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம்? மண்ணாசைதான். எப்படி சீனா, மண்ணாசை பிடித்து மற்ற நாடுகளை உயிரியல் போரின் வழியாக ஊடுருவ முயற்சிக்கிறதோ, அதன் எல்லைகளை விரிவாக்க நினைக்கிறதோ, அதே வேலையை பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்து செய்து வந்தது. மண்ணாசை பிடித்த இங்கிலாந்து எப்படி இந்தியாவைக் கைப்பற்றியதோ அதேபோல், அமெரிக்காவை முற்றுகையிட்டு செவ்விந்தியர்களை விரட்ட முனைந்தது. செவ்விந்தியர்கள் அவர்களை கடுமையாக எதிர்த்து நின்று போரிட்டனர். இங்கிலாந்தால் அவர்களை அடக்கி ஒடுக்க இயலாத அளவிற்கு, தங்கள் நிலத்தை பாதுகாத்துக் கொள்ள, முரட்டுத்தனமாக தாக்குதல்களை நடத்தினார்கள் செவ்விந்தியர்கள். கற்களும், விச அம்புகளும், துப்பாக்கிகளுக்கு முன்னால் என்ன செய்ய முடியும் என்று அவர்கள் நினைக்கவில்லை. நம்பிக்கையோடும் இனப் பற்றோடும் ஒன்று கூடி எதிர்த்தார்கள். ஆனால், கடுமையான ஆயுதபலம் கொண்ட இங்கிலாந்து இராணுவத்தோடு அவர்களால் தொடர்ந்து போரிட



இயலவில்லை. கி.பி.1763ல் இந்தியாவை காலனியப் படுத்திக் கொண்டிருந்த அதே கால கட்டத்தில் இங்கிலாந்து வட அமெரிக்காவிலும் காலனியப் போரை நடத்திக் கொண்டிருந்தது. செவ்விந்தியர்களின் இன அழிப்பு வேலையை அப்போதுதான் இங்கிலாந்து செய்யத் தொடங்கியது.

வட அமெரிக்காவில் இருந்த இங்கிலாந்து படைத் தலைமைத் தளபதியான ஜெப்ரிஅம்ஹெர்ஸ்ட் இன் கூற்றுப்படி அங்கே ஓர் உயிரியல் போருக்கான செயல் நிகழத் தொடங்கியது. சின்னம்மை என்று சொல்லக்கூடிய நோய்த் தொற்றின் கிருமிகளை ஏவிவிட்டாவது இந்த செவ்விந்தியர்களின் இனத்தை அழிக்க வேண்டும் என நினைத்தோம் என்றார் ஜெப்ரி. சின்னம்மை பாதிக்கப்பட்டவர்களின் உடலில் போர்த்தியிருந்த போர்வைகள், அந்த கொப்புளங்களில் வடிந்த சீழ்கள் துடைக்கப்பட்ட கிருமிகள் கொண்ட கைக்குட்டைகள் ஆகியவை உயிரியல் ஆயுதங்களாக, செவ்விந்தியர்கள் மீது வீசப்பட்டன. இதனால் ஏற்பட்ட நோய்த் தொற்றால் ஏராளமான செவ்விந்தியர்கள், சின்னம்மை ஏற்பட்டு கொத்துக் கொத்தாக உயிரிழந்தனர். இந்த உயிரியல் ஆயுதத்தால் பல ஆயிரம் செவ்விந்தியர்கள் கொல்லப்பட்டனர். அது மட்டுமல்ல அமெரிக்க சுதந்திரப்போர் நடந்து கொண்டிருந்த காலகட்டத்திலும் சின்னம்மை நோய் வேண்டுமென்றே பரப்பப்பட்டது என்று வரலாற்றில் எழுதப்பட்டிருந்தது. இப்படி உயிரியல் போரின் வழியாக ஒரு பழமையான, பண்பட்ட இனம் ஒன்று அழிந்து போனதற்கு யார் காரணம்? மனிதப் பேராசைதானே! உலகெங்கும் உயிரியல் போரால், செவ்விந்தியர்கள் போல கொல்லப்பட்ட மனித உயிர்கள் ஆங்காங்கே புதைந்து கிடக்கின்றன.

எந்த அமெரிக்காவின் பூர்வ குடிகளான செவ்விந்தியர்கள் மீது உயிரியல் ஆயுதங்கள் புறப்பட்டதோ, அதே அமெரிக்காவின் புதிய அரசு 1942ஆம் ஆண்டில் உயிரியல் ஆயுதத்தை மேலும் விரிவுபடுத்தியது. அதன் வழியாக 1942ஆம் ஆண்டில் 400 கறுப்பின அகதிகள் பரிசோதனை எலிகளாக பயன்படுத்தப்பட்டனர். மலேரியா, நோய்க்கிருமிகள் தொற்று அவர்களுக்குத் தெரியாமலேயே அவர்களுக்குச் செலுத்தப்பட்டது. அதே போல ஜப்பானின் உயிரியல் ஆயுத விஞ்ஞானியாக இருந்த சிரோஷெல் சீன, ரசிய, அமெரிக்கக் கைதிகளின் மீது உயிரியல் கிருமிகளை தொற்ற வைத்து பரிசோதனை நடத்தினார். அமெரிக்கர்களிடம் ஜப்பான் சரணடைந்த பிறகு அவருக்கு அமெரிக்கா மன்னிப்பு வழங்கியது. அதுமட்டுமல்ல, 1971ஆம் ஆண்டு கியூபாவில், பன்றிக்காய்ச்சல் பரவியது. இந்த பன்றிக்காய்ச்சல் கிருமிகள், கியூபாவின் காஸ்ட்ரோ எதிர்ப்பு கியூபர்களிடம் சி.ஐ.ஏ. கொடுத்ததாக, ஒரு தகவல் இணையத்தில் உலா வருகிறது.

கிருமி நாசினி தெளிக்கும் அமெரிக்க விமானங்கள், கியூபாவின் வான்பரப்பில் தென்பட்டதாகவும், இதன் விளைவாக கியூபாவின் உணவுப் பொருள் உற்பத்தி நிலங்கள் பாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இப்படி பல உலக நாடுகளின் உயிரியல் ஆயுதங்கள், உலகெங்கும் வாழும் மக்களின் உயிர் முடிக்கும் ஆயுதமாக இருந்ததை வரலாறு பதிவு செய்திருக்கிறது.

மீண்டும் 2020ஆம் ஆண்டு இந்தக் கொடுமையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது உலகம். பேராசை பிடித்த மனிதர்கள் இருக்கும் வரை பேரழிவுகளும் தொடர்ந்து கொண்டிருக்கும் என்பதற்கான எடுத்துக்காட்டுதான், என்னோடு வாழ பழகிக் கொள்ளுங்கள் என்று அழைப்பு விடுக்கும் சீனாவின் உயிரியல் ஆயுதம்.

**- கிறிஸ்டோபர்**



# நாடகக் கொட்டாய் முதல்... சினிமாக் கொட்டாய் வரை!

# 8



## 'மக்கள் கலைஞர் ஜெய்சங்கர்'

பூவை தயா

ஒன்றே குலமும் ஒருவனும் தேவனும்
நன்றே நினையின், நலனில்லை, நாள்நாமே
சென்றே புகும்கதி இல்லையென்று சிந்தித்து
நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்ம்மினே!

சமயங்கள் வேறுபட்டாலும் மனிதர்கள் யாவரும் ஒரே குலமென்றும், அவர்கள் வழிபடும் தெய்வமும் ஒன்றே என்றும்... நல்லதையே நினையுங்கள், நம்மை அழிக்கும் ஆற்றல் என்று ஏதுமில்லை. நல்ல நேரம் கேட்ட நேரம், தகுந்தநாள் தகாதநாள் என்பதெல்லாம் நாமாக கற்பனை செய்து கொண்டவை. விதி என்பதும் விதித்த விதிப்படியே நம் கதி என்பதும் பொய்யானது. உனது அறிவின் வழிநின்று நிலைபேறு அடையும் முறையை திட்டமிட்டு முன்னேறும் வழியைத் தேடுங்கள் என்று, திருமந்திரத்தில் 'திருமூலர்' உரைத்ததை நினைத்துப் பார்க்கிறேன். தெய்வம் தவிர்த்து



தந்தை பெரியாரும் ஏறக்குறைய இதையே வழி மொழிந்ததாகக் கருதுகிறேன்.

திருமூலரின் காலம் கி.பி.ஆறாம் நூற்றாண்டு எனக் கூறப்படுகிறது. ஆறாம் நூற்றாண்டிலேயே பகுத்தறிவு விதையைத் தூவியவர் திருமூலர் எனலாம். நானும் பகுத்தறிவுப் பாசறையின் வாயிற்கதவுவரை சென்று, உள்ளே செல்லலாமா வேண்டாமா என்று இது நாள் வரை போராடிக் கொண்டிருக்கிறேன். ஆக இன்றுவரை இரண்டும் கெட்டான் தனமாகத்தானிருக்கிறேன். ஆயினும், எனது எழுத்தில் ஒரு தனி மனிதனின் வெற்றிக்கு பெரிதும் துணை நிற்பது... அவனது ஈடுபாடும் முழுமுயற்சியுமேயாகும் என்ற கருத்தை மையமாக வைத்தே எழுதி வருகிறேன். எல்லாவற்றுக்கும் கடவுளே காரணியென்று இதுவரை நான் சொன்னதில்லை. வரலாற்று நாடகங்கள், இதிகாசம், புராண நாடகங்கள் இதற்கு விதிவிலக்கு. நான் ஒரு சாராசரி மனிதன்... இன்றைக்கு ஒரு கருத்தைச் சொல்வதும், நாளை அந்தக் கருத்திலிருந்து பின்வாங்குவதும் என் பிறவிக்குணம். பிறவிக் குணமானாலும் எனது எழுத்தில் கருத்தில் பிழை இருக்காது. காலத்திற்கு ஏற்றவாறு பொருந்தியே இருக்கும். தேங்கிய கழிவு நீரைப்போல் இல்லாமல் பாய்ந்து வரும் புதுவெள்ளம் போல் நமது கருத்துக்கள் இருக்க வேண்டும். இருவேறு கருத்துடையவனாக இருந்தாலும் நெறிபிறழாது இருக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவன்.

என்னைப்பற்றி சொல்ல மறந்த ஒன்று... நான் ஒரு சினிமாப் பைத்தியம். எம்ஜிஆர், சிவாஜி, ஜெய்சங்கர், முத்துராமன், ரவிச்சந்திரன் படங்களை விரும்பிப் பார்ப்பேன். இந்த வகையில் என் பட்டியல் நீண்டு கொண்டே போகும். 'சதிலீலாவதி' முதல் 'அவசர போலீஸ்' வரை 137 படங்கள் எம்ஜிஆர் நடித்தது என்றால், அவற்றில் 75 படங்கள் பார்த்திருப்பேன். நடிகர் திலகத்தின் பராசக்தி முதல் 'திரிசூலம்' வரை 200 படங்களாகும். இவற்றில் நான் குறைந்தது 180

படங்கள் பார்த்திருப்பேன். திரிசூலத்திற்கு பிறகு வந்த படங்களில் சரிபாதி நான் பார்க்கவில்லை. நான் எல்லாப் படங்களையும் பார்ப்பவன் என்றாலும், மக்கள் கலைஞர் ஜெய்சங்கரின் தீவிர ரசிகனாவேன். அவருக்கு 'இரவும் பகலும்' முதல்படம் என்றால் 'டாக்சிடிரைவர்' 150 ஆவது படமாகும். அதன் பின்னரும் 25 படங்களுக்குமேல் அவர் கதாநாயகனாக நடித்திருக்கிறார். மொத்தத்தில் அவர் நடித்து ஒரு பத்து படங்களே பார்க்காதவனாவேன்.

ஒருமுறை ஜெய்சங்கரைச் சந்திக்க அவரது இல்லம் சென்று காத்திருந்தேன். அவரது உதவியாளரிடம் என்னைப் பற்றிய விவரங்களை தெரிவித்தேன். என் தலைவன் வெளியே வந்தார். நான் வணக்கம் தெரிவிக்க, அவரும் பதில் வணக்கம் தெரிவித்தார். உதவியாளர் என்னைச் சுட்டிக்காட்டி எல்லா விபரமும் சொன்னார். மக்கள் கலைஞர் என்னை அழைத்தார். என்ன காரணமாய் பார்க்க வந்தாய் என்று கேட்க, நான் கையில் வைத்திருந்த 'மனிதன் ஒரு புத்தகம்' ஸ்கிரிப்டை அவரிடம் கொடுத்து, அடுத்த மாதம் ஸ்வாமி சங்கரதாஸ் கலையரங்கில் (நடிகர் சங்கம்) இந்த நாடகம் நீங்கள் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்க வேண்டும் என்றேன். ஸ்கிரிப்டில் ஒரு சில பக்கங்களைப் புரட்டிப் பார்த்துவிட்டு 'மனிதன் ஒரு புத்தகம், தலைப்பு அருமை" என்றவர் அதில் உள்ள ஒரு பாடலை மட்டும் நன்கு கவனித்தார். "பாட்டு நல்லாருக்கு தம்பி, கவிஞர் மகனாச்சே சொல்லவா வேணும்" என்று கூறி தோளில் தட்டிக் கொடுத்து, "தம்பி மன்னிக்கணும் அடுத்த நாடகத்துக்கு நிச்சயம் வர்றேன்" என்றார். பின்னர் காரில் ஏறினார். காரிலிருந்து கையசைத்து என்னை அழைத்து "நாடகத்துக்கு தலைமை தாங்க கூப்பிட 'ஸ்கிரிப்ட்' எடுத்துட்டுப் போகணும்னு யார் சொன்னது?" என்று கேட்டார் நான் மௌனமாக நின்றேன். அவர் சிரித்தார். சிரித்தபடியே கார் பறந்தது. நாடகத்திற்கு தலைமை தாங்க வர மறுத்ததில் வருத்தம் என்றாலும் அவர் என்னுடன் சிறிது நேரம் பேசியதில் பெரும் மகிழ்ச்சி கொண்டேன். அவர் பாராட்டிய எனது பாடல் இதுதான்.

**தொகையறா**
வானத்தைச் சுற்றிவரும்
மேகத்தின் ஊர்வலங்கள்
மழையாக மண்ணில்விழும்! மனித
இதயத்தை சுற்றி வரும்
சந்தேக ஊர்வலங்கள்
சுமையாக நெஞ்சில் விழும்!
**பல்லவி**
நல்லவன் போல வாழ்பவனெல்லாம்
நடிக்கின்ற மனிதனடா தினம்
நாடக உலகில் ஒவ்வொரு மனிதனும்
வேசங்கள் போடுகின்றான்!
பொல்லாத உலகமடா
நம்மை கொல்லாமல் கொல்லுமடா!
தன்னலம் நினைத்து பெண்ணைப் பழிப்பவன்
கோவிலை இடித்த படுபாவி
தர்மநியாயங்கள் தெரிந்தும் அதனை
மறந்து வாழ்பவன் கொடும்பாவி!

இந்தப் பாடலோடு நாடகத்தில் பாடல் வைப்பதை நிறுத்திக் கொண்டதில் 'மக்கள் காப்பாற்றப்பட்டார்கள்' என்று என் நண்பர்களே கூறினார்கள்.

சரி அடுத்து என்ன செய்யலாம், யாரை தலைமை தாங்க அழைக்கலாம் என்று எண்ணியபோது எனக்கு உடனடியாக தேனாம்பேட்டை 92சி தான் நினைவிற்கு வந்தது. தேனாம்பேட்டை சிக்னல் அருகே இப்போதிருக்கும் ஹோட்டல் ஆனந்தா அருகாமையில் உள்ளதுதான் 92சி என்ற காம்பவுண்ட். இந்தக் காம்பவுண்டிற்குள் தனித்தனியாக வாசல் கொண்ட எட்டு அறைகள் இருக்கும். ஒவ்வொரு அறையிலும் எட்டுப் பத்துப்பேர் தங்கியிருப்பார்கள். அத்துணை பேரும் நாடக, திரைப்பட கலைஞர்கள். இயக்குனரும் நடிகருமான பார்த்திபனும் அங்குதான் தங்கியிருந்தார். இன்றைய பல முன்னணி நடிகர்களும் இயக்குநர்களும் 92சியில் இருந்தவர்களே.

நான் தினமும் 92சிக்கு எனது நண்பர்களான மூர்த்தி, மகேந்திரன், தபேலா பத்மனாபன் இவர்களைப் பார்க்க வருவேன். பல நேரம் தபேலா பத்மனாபன் எங்களுக்காக தபேலா வாசிப்பார். எனது வீடும் அடுத்த தெருவில் இருந்ததால் இரவு பன்னிரெண்டு மணிவரை கூட பேசிக் கொண்டிருப்போம். அந்த 92சியில் அடிக்கடி கழிவுநீர் அடைத்துக் கொள்ளும். ஒவ்வொரு அறைக்கும் செல்ல செங்கற்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அந்த வகையில் அங்கே நான் நண்பர்களுடன் வெளியே பேசிக் கொண்டிருக்கும் நேரம் 'கல்லாப்பெட்டி சிங்காரம்' அவர்கள் வந்தார்கள். மூர்த்தி அவரிடம் என்னை அறிமுகம் செய்து வைக்க "அப்படியா... கவிஞர் மகனா தம்பி நீங்க!" என்று சிறது நேரம் கலகலப்பாக பேசிக் கொண்டிருந்தார். நான் அவரிடம் எனது நாடகத்திற்கு தலைமை தாங்க வர இயலுமா என்று கேட்டதும். மறுப்பேதும் சொல்லாமல் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டார். ஒப்புக் கொண்டாற்போல் நாடகம் நடைபெறும் நாளன்று முன்னதாகவே வந்து, நாடகக் கலைஞர்கள் யாவரையும் ஆசீர்வதித்து தன் இருக்கை யில் அமர்ந்தார்.

நாடகத்தை முழுமையாக பார்த்தபின்னர் எல்லோரையும் பாராட்டி உரையாற்றினார். அந்தப் பாராட்டில் உண்மையான ஒரு கலைஞனின் திறந்த மனதை எல்லோரும் கண்டோம். நன்றி கூறினோம். அவர் மிக உரிமையுடனும் உற்சாகத்துடனும் தலைமை தாங்க கலந்து கொண்டதற்கு முக்கியக் காரணம், நான் கவிஞர் பூவைசெங்குட்டுவன் மகன் என்ற ஒரே காரணம் தான்!

**பயணம் தொடரும்**



# ‘வாங்கருவா’ சிறுகதை

“பெரியப்பா உங்க வாங்கருவாக்கம்பு குடுங்க“

“எதுக்குடா வாங்கருவா? மழை பேஞ்சுக்கிட்டு இருக்கு என்ன செய்யப்போற வாங்கருவாவ வச்சு“

“நம்ம வீட்டுப்பக்கத்துல நின்ன வாகை மரத்துல ஒரு கொப்பு ஒடிஞ்சு தொங்கிக்கிட்டு இருக்கு. அதை என்னோட வாங்கருவா வச்சு இழுத்தேன். அருவா கொப்புலயே சிக்கிக்கிச்சு பெரியப்பா அதான் உங்க வாங்கருவாவக் கேக்குறேன்“.

“கசாலையில (வீட்டை ஒட்டி ஆடு, மாடு கட்டும் இடம்) இருக்கு பாரு, எடுத்துக்க. உன் வேலைய முடிச்சுட்டு, உன் கூட்டாளிகளை சேத்துக்கிட்டு, நம்ம கம்மாக்கிப் போயி, கரை நல்லா இருக்கான்னு பாத் துட்டு வந்திருங்கடா, போகும்போது மம்பட்டியும் கூடையும் எடுத்துக்குங்க, ஏதாவது விரிசல், அல்லது கசிவடிச்சா சரிபண்ணிட்டு வந்துருங்க. தெக்குப் பகுதியில இருந்து கம்மா முடியிற வடக்குப் பகுதி முழுக்க நல்லா ஒரு பார்வை பாத்துட்டு வந்துருங் கப்பா. கம்மாய்க்கு தண்ணி வரத்து அதிகமாக வந்துக் கிட்டு இருக்காம். கரையப் பாதுகாக்கலன்னா வெள்ளா மையும் போயிரும், ஊருக்குள்ளயும் தண்ணி வந்துரும். போய்ப் பாத்துருங்கப்பா“

“சரி பெரியப்பா, வாங்கருவாள அப்புறம் வந்து எடுத்துக்கிறேன். முதல்ல கம்மாக்கரையப் போய் பாத்துட்டு வந்துறோம் என்று சொல்லிவிட்டு கிளம் பினான் இளவழகு. காலை எட்டு மணிக்கு கிளம்பிய அந்த ஊர் இளைஞர் குழு, பகல் பொழுது முடியும் போது தான் ஊர் திரும்பியது.

“வீட்டுக்குப் போவதற்கு முன் பெரியப்பாவிடம் சொல்லிவிட்டு வந்துவிடுகிறேன். நீங்கள் எல்லாம் வீட்டுக்குப் போங்கள்“ என்று சொல்லிவிட்டு இளவழகு மட்டும் பெரியப்பா வீட்டுக்கு வந்தான்.

இளவழகு வருவதை தூரத்திலேயே பார்த்துவிட்ட பெரியப்பா, கண்மாய் எப்படி இருக்குன்னு தெரியலையே என்று கவலை கொண்டவராய், அவனது பதிலுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். அவன் வீட்டிற்குள் வருவதற்கு முன்பே, அவன் போட்டிருந்த கொங்காணியை (சாக்குப்பை) வாங்கிக் கொண்ட, ஒரு துண்டைக் கொடுத்து, “தலையத் தொவட்டிக்கடா. என்னடா ஆச்சு? கம்மாக்கிப் போனீங்களா? என்று கேட்டார்.

“பெரியப்பா, நீங்க காலையில சொன்னதும் நான் ஊருக்குள்ள போயி பயலுகளை கூட்டிக்கிட்டுப் போனேன்“.

“காலையில போனீங்களா? அப்ப இவ்வளவு நேரம் என்னடா பண்ணீங்க? இப்பதா வரீங்க?

ஆமா பெரியப்பா, நம்ம பொடக்கொல்லைப் பக்கத்துல இருக்கிற கம்மாக் கழுங்குக்கிட்ட தண்ணி கசிஞ்சு வந்துக்கிட்டிருந்துச்சு. போன ஆண்டு, கம்மா அழியப்போற சமயத்துல, மோட்டாரு வச்சு தண்ணிப் பாச்சும்போது, மோட்டாரக் கொண்டு போக கரைய வெட்டிப் போட்டுருந்தானுகள்ள, அத மூடும்போது சரியா மூடாம போயிருக்காங்க. அதுனாலதான் தண்ணி கசிஞ்சு வந்துக்கிட்டிருந்துச்சு.

நல்ல வேளை பெரியப்பா நீங்க பாத்துட்டு வரச்சொன்னீங்க! அதுவும் நாங்க 12 பேரு போனோம். நாங்க மட்டும் போகாம இருந்துருந்தா, நம்ம கொல்லையில பொதி தள்ளுற நெலையில இருக்கிற வரப்புக் கொடஞ்சான் பயிரெல்லாம் தண்ணில போயிருக்கும். நம்ம கொல்லை மட்டும் இல்ல,

வெள்ளாமையே அழிஞ்சு போயிருக்கும். ஊருக் குள்ளயும் தண்ணி வந்திருக்கும். நல்ல வேளை, நாங்க எல்லாரும் மண்ணை வெட்டி கரையை உயத்தி, கருப்பண்ணன் மாமா வீட்டுக்குப் போயி திமிசு வாங்கிட்டு வந்து, ஒவ்வொரு கூடை மண்ணு போடும்போதும், திமிசு போட்டு கரைய நல்லா பலப்படுத்திட்டோம். அதான் இவ்வளவு நேரமாச்சு!"

"வேற எங்கயும் எந்தப் பிரச்சனையும் இல்லையேப்பா?" அது தெரியல பெரியப்பா, நாங்க இந்த வேலைய முடிக்கவே சாப்பாட்டு நேரம் தாண்டி ருச்சு. வேலைய முடிச்சுட்டு வடக்கு விசவனூர் வரைக்கும் போனோம். அங்க தங்கச்சாமி பெரியப்பா மகனும் ஊர்க்காரப் பயல்களும் நின்னுட்ருந்தாங்க. அவங்கக்கிட்ட கம்மாய் நல்லா இருக்கான்னு கேட்டோம். நாங்க சூரியங்கோட்டை வரைக்கும் போயிட்டு வந்துட்டோம். ஒன்னும் சிக்கல் இல்லை. கரை நல்லாத்தான் இருக்கு. ஆனா, மழைத் தண்ணியோட வரத்து அதிகமா இருக்கு, அதான் மடையத் தொறந்து விடலாமான்னு பெரியவங்கக் கிட்ட கேக்க ஆளு விட்டிருக்கோம். ஏழுபேரு ஏழு பேரா கம்மாக் காவலுக்குப் போட்டிருக்கோம், இரவுக் காவலுக்கும் ஆளுப்போட்டுக்கோம்னு சொன்னாரு.

எங்கக்கிட்டயும் உங்க ஊரு எல்லைக்குள்ள கம்மாக்கரை எப்படி இருக்குன்னு கேட்டாரு, நானும் சொன்னேன். காவலுக்கு ஆளப்போடுங்க, அப்பா தெக்கூருக்குப் போயி, பெரியப்பாக்கிட்ட பேசணும்னு சொல்லிக்கிட்டிருந்தாங்கன்னுசொன்னாரு பெரியப்பா, உங்களப் பாக்க வருவாங்க.

"புள்ளை காலையிலயிருந்து சாப்பிடமா ஊரு வேலை செஞ்சுட்டு வந்து நிக்கிறான், அவங்கிட்ட கேள்விமேல கேட்டுட்டு இருக்கீங்களே", என்று பெரியம்மா இடைமறிக்க.

"ஆமாடா, நீ சாப்புடு மொதல்ல, நம்ம பொன்முடி, பறி வச்சு மீன்பிடிச்சான். அயிர மீனு நெறைய கெடச்சிருக்கு. அத பெரியம்மா கொழம்பு வச்சிருக்கா. நீ சாப்புடு அப்புறம் பேசுவோம்" என்றார் பெரியப்பா.

"பெரியம்மா உங்க வீட்டுத் தெருவுல திரும்பும் போதே மீன் கொழம்பு வாசனை வந்துச்சு பெரியம்மா. நீங்க வக்கிற கொழம்புதான் ஊருக்கே மணக்கும். நீங்க சோறு கொடுக்கலன்னாலும் உங்கக்கிட்ட கேட்டு சாப்பிட்டுட்டு போகணும்னுதான் வந்தேன். அது எப்படி பெரியம்மா நீங்க மீன் கொழும்பு வச்சா மாத்திரம் இப்படி மணக்குது? பறில விழுகுற மீனு ஒரு சுவையாத்தான் இருக்கு. ஆமா, பொன்முடி எங்க பெரியம்மா? என்றான் இளவழகு.

"அவன் நாலு எடத்துல பறி வச்சிருக்கான், அதுப் போயி பாத்துட்டு, இருக்கிற மீன வாலில தட்டி எடுத்துட்டு வர்ரேன்னு போயிருக்கான்"

"இருட்டிருச்சு, அவன ஏன் அனுப்பினீங்க?" "நானா அனுப்புனே, உங்க பெரியப்பாதான். நான் பறியோட எடுத்துட்டு வந்துரு, நாளைக்கு வச்சுக்கலாம்னு சொல்லி எடுத்துட்டு வரச்சொல்லியிருக்கிறேன். பறில விழுகுற மீன எல்லாம் கொழம்பு வைச்சு யாரு சாப்புடுறது. அதான் கொஞ்சம் மீனை கொடல எடுத் துட்டு, ஆஞ்சு, உப்புப் போட்டு வச்சிருக்கே. கொஞ்சம் வானம் வெறிக்கும் போது காயப் போடணும்.

சரி சரி நீ பேசிக்கிட்டே இருக்காம, அவனுக்கு அயிர மீன அரிச்சு வையி என்று பெரியப்பா கூற, கொழம்புச் சட்டியையே கொண்டு வந்து இளவழகு முன்பாக வைத்துவிட்டார் பெரியம்மா.

"இளவழகு, நீ போகும்போது பெரியம்மாட்ட கொஞ்சம் கொழம்பு வாங்கிட்டுப் போயி உன் அப்பங் கிட்டக் கொடு, அவன் விரும்பிச் சாப்பிடுவான். நீ சாப்புட்டுட்டு வீட்டுக்குப்போ, மடையத் தொறக்கலா மான்னு யோசிச்சு முடிவெடுக்கிறேன். ஊருல உள்ளவங்கக்கிட்டயும் கலந்து பேசிட்டு, ராத்திரி காவலுக்கு ஆளு தயார் பண்ணி அனுப்புறேன்" என்று கூறிவிட்டு குடையை எடுத்துக் கொண்டு ஊருக்குள் சென்றார்.

இளவழகுக்கு உணவு பரிமாறும்போதே, கொழுந்த னுக்கு என்று மீனும் கொழம்பும் ஒரு தூக்குச் சட்டியில் ஊற்றித் தயாராக வைத்திருந்தார் பெரியம்மா. அந்தச் தூக்குச் சட்டியை வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான் இளவழகு, வாங்க வேண்டிய வாங்கரு வாவை வாங்காமலே.

வீட்டிற்குள் நுழைந்ததும், "வாங்கருவா வாங்க பெரியப்பா வீட்டுக்கு காலைல போனவன் இப்பதான் வரியா? ஆடு மாடெல்லாம் பசியாக் கெடக்கு" என்று அம்மா சினம் நிறைந்து பேசுவது போல் பேச, அப்போதுதான் இளவழகுக்கு வாங்கருவா நினைவே வந்தது.

ஆகா, வாயில்லா உயிர்களயெல்லாம் பட்டினி போட்டுட்டோமே என்று வருத்தத்துடன் ஆடுகளைப் போய்ப் பார்த்தான். அவை வேப்பங்கொலையை தின்று கொண்டும் அசை போட்டுக் கொண்டும் இருந்தன. இளவழகு பின்னாலேயே வந்த அம்மா, பெரியப்பா சொல்லி நீ கம்மாக்கரையப் பாக்கப் போனத சுந்தரம்பா சொன்னா. அதான் அப்பா போயி ஆடுகளுக்கு வேப்பங்க கொலை கொண்டு வந்தாங்க" என்றார்.

இளவழகு நிம்மதிப் பெருமூச்சு விட்டான். மகன் செய்த ஊர்ச் சேவையும், அக்காவின் மீன் கொழம்பு வாசமும் மனதை நிறைக்க, கணவனும் மனைவியும் மீன் கொழம்பு சோறு உண்டு கொண்டிருந்தனர். இளவழகு, உண்ட மயக்கத்தில் நிம்மதியாகத் தூங்கினான். கனவில், கோடை காலத்திலும் கண்மாய் நீரை வைத்து வேளாண்மை செய்வது போலவும், நிலங்கள் நல்ல விளைச்சலைத் தந்து, அவன் கதிரடிப்பது போலவும் கனவு கண்டான்.

**- இருங்கோவேள்.**

# காய்கறி!

தக்காளி எப்போதும் உட்கொண்டால் தரணியில்
எக்காலும் நோயில்லை காண்.

எலுமிச்சை புளித்தாலும் எடுத்ததை உட்கொள்வீர்
எலும்புக்கு வலு சேர்க்குமே

வெங்காயம் இல்லாச் சாம்பார் எஞ்ஞான்றும்
தங்காதே நாவில் ருசி

பொல்லாத பேரையும் நல்லவ ராக்குமே
புடலங்காய் போற்றிச் சுவை

தள்ளாத வயதிலும் உள்ளே தள்ளுவாய்
முள்ளங்கி மூன்றினைத்தான்

வெண்டைக்காய் இருக்கையில் சுண்டை எந்நாளும்
தொண்டையில் இறங்காது காண்

வள்ளிக் கிழங்குண்ணார் வையத்தில் வாழ்ந்தும்
வாழாதார் என்பது வழக்கு

கத்தரி உண்பாரே உண்பார் மற்றெல்லாம்
இத்தரையில் பித்தருக்குச் சமமெனக்கொள்

பூசணியைச் சேர்த்தாரே புண்ணியர் பூவுலகில்
புகழோடு வாழ்வார் அவர்

காய்கறியைத் தின்னாதார் வாழ்க்கை எப்போதும்
நோய்நொடியில் வீழ்ந்து கெடும்

முருங்கைக்காய் ருசித்தாரே ருசித்தார் மற்றோரேல்லாம்
வெறுங்கையில் முழம் போடுவர்

காரிருளில் கண்தெரிய வேண்டுமெனில் பாரிலுள்ள
கரிசலாங் கண்ணியைச் சேர்

இரும்பைப் போல் இதயமது வேண்டுமெனில்
கரும்பைப் போய் விரும்பிச்சுவை

உரிக்க உரிக்கத் தோல்தான் வெங்காயம்
என்றாலும் செரிக்குமோ உரிக்காவிடில்

பறித்தவுடன் உண்ணுவீர் பரங்கியை எப்போதும்
பலனது வேண்டுமெனில்

பாகற்காய் கசக்கும் என்பதால் சீண்டாதார்
சோகத்தில் சேர்ந்து விழும்

வெல்லத்தில் இரும்புண்டு ஆகையினால் உணவில்
ஒருதுண்டு சேர்த்துச் சமை

வாழ்வதனால் ஆயபயனென்கொல் வாழைக்காய்
தாழ்வெனவே எண்ணுபவர்

கேரட்டைச் சேர்க்காத சமையல் கிணற்றுக்குள்
தேரை வாழ்ந்த கதை

பீடுநடை போடுதல் வேண்டுமெனில் நாளும்
பீட்ரூட்டை உணவில் சேர்

கொத்தவரை பீன்ஸ முட்டைகோசு இவையெல்லாம்
சத்தே என்று சரியாய் உணர்

கறிவேப்பிலை மல்லி கடுகு சேர்க்காதோர் சொறி
பிடித்தோடுவார் காண்

பொன்னிற மேனி வேண்டுமெனில் நீஅந்த
பொன்னாங் கண்ணியைச் சேர்

கண் இருந்தும் குருடரே காசினியில்
காய்கறியை உண்ணாதவர்.

நன்றி –
**சார்லஸ் மூவேந்தன்,**
சின்னமலை.



# DR. BASKARAN'S PAGES

# MEDICAL RHYMES

**NECK**

**1. BRIDE GROOM**

**NEVER put T.V. in bed room**

**You neck is not stick broom**

**Neck strain – Never make room**

**Keep neck straight as groom**

**2. COLLAR**

**Neck muscles worth like dollar**

**Why you waste them with collar**

**Cervical collar not healer**

**Rest will make neck cooler**

**3. PILLOW**

**Never lie without pillow**

**No high pillow; Have low**

**Turning neck with speed slow**

**Never restrict neck blood flow**

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல்
வார்த்தைகளைக் கொன்றுவிட
வடக்கதிகாரம் திட்டம் போடுதே
வாழ்விக்கும் தமிழ் நிலத்தை
பாலைவனமாக்கி
சோமாலியா தேசமாக்க
கெடு செயல் செய்கிறதே
கால்நடை கொன்று
மீத்தேன் எடுக்க ஓடி வருதே
தாமிரம் தயாரிக்கிறோம் என்று
முத்து நகரை மொத்தமாய் அழிக்க
வடவனரசு முனைப்புக் காட்டுதே.

இருங்கோவேள்.

## இந்தி தேசத்திலிருந்து வந்தவர்கள் இந்தியில் தேர்ச்சி பெறாமல், தமிழில் தேர்ச்சி பெற்றது எப்படி?

தமிழகத்தில் சுமார் எண்பது இலட்சத்திற்கும் மேற்பட்ட படித்த இளைஞர்கள் உரிய வேலைவாய்பின்றி தவித்து வருகிறார்கள். இந்தச் சூழலில் தமிழகத்திலுள்ள மத்திய அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வட மாநிலத் தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுவ தாகவும் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் குற்றச் சாட்டு எழுந்துள்ளது. குறிப்பாக, தெற்கு ரயில்வேயில் எலக்ட்ரீசி யன், பிட்டர், மெக்கானிக், வெல்டர் பணியிடங் களுக்கு சுமார் 1600க்கும் மேற்பட்ட வட மாநிலத்தவர் தேர்வு செய்யப்பட்டது கடந்தாண்டு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி யது. இதோடு தபால்துறை, மின்துறையிலும் பல வட மாநிலத்தவர்கள் தேர்வு செய்யப்பட்டதற்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

கடந்த 2011ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசுத் துறைகளில் நடந்த பணி நியமனங்களில் 99 விழுக்காடு பேர் வடமாநிலத்தவர்கள் என்றும், தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வெறும் 0.5 விழுக்காடு பேர்களுக்கு மட்டுமே வேலை கிடைத்திருக்கிறது என்றும் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இது தொடர்பான ஒரு வழக்கில், மதுரை உயர்நீதி மன்ற கிளையின் நீதிபதிகள் 'இந்தியிலேயே போதிய தேர்ச்சி பெறாத வடமாநிலத்தவர்கள், தமிழ் மொழி தேர்வில் பெற்றி பெற்று, அதிக மதிப்பெண்களுடன் பணி யில் சேர்வது எப்படி என கேள்வி எழுப்பியிருக்கின்றனர்.

எண்ணூரில் ஆறும் கடலும் கலக்கும் முகத்து வாரப் பகுதியில் மீன்கள், நண்டு, இறால் அதிக அள வில் கிடைக்கும். இப்பகுதியில எண்ணூர் தாழங் குப்பம், நெட்டுக்குப்பம், எண்ணூர்குப்பம், பெரிய குப்பம், சின்னக் குப்பம், முகத்தவாரக் குப்பம், சிவன் படைக் குப்பம், காட்டுக்குப்பம் ஆகிய எட்டு கிராம மீனவர்கள் மீன்பிடித்து வந்தனர். மேலும் முகத்துவாரப் பகுதியில் இருந்து கடலுக்குள் பைபர் படகுகளில் சென்று மீன்பிடித்தும் வந்தனர். இந்த நிலையில் எண்ணூரில் காமராசர் துறைமுகம் அமைக்கப்பட்டது. இதனால் முகத்துவாரப் பகுதியில் மணல் திட்டு ஏற்பட்டு மீன்வளம் குறைந்தது. இதனால் தங்களுக்கு தொழில் பாதிப்பு ஏற்பட்டு மீனவர்களின் வாழ்வா தாரம் பாதிக்கப்பட்டு உள்ளது. துறைமுகம் அமைக்கப் படாதால் இந்தப் பகுதியில் கடலரிப்பு அதிகமாக இருக்கிறது. ஆகவே, 2 தூண்டில்வளைவுகள் அமைத்து கடலரிப்பைத் தடுக்க வேண்டும்.

முகத்துவராத்தில் தினமும் மண் சேருவதால் அதை ஆழப்படுத்தி தூர்வாரித் தரவேண்டும் என் பொதுப்பணித்துறை மற்றும் காமராசர் துறைமுக அதிகாரிகளிடம் இந்த கிராம மீனவர்கள் கோரிக்கை வைத்திருந்தனர். மேலும் எண்ணூர் காமராசர் துறைமுக வேலை வாய்ப்பில் மீனவர்களுக்கு முன்னு ரிமை அளிக்க வேண்டும் என்றும் பல முறை கோரி வந்தனர். ஆனால், இவர்கள் கோரிக்கைகள் எதையும் எண்ணூர் துறைமுகம் நிறைவேற்றவில்லை என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் 30ஆம் நாள் அன்று முகத்துவராத்தை தூர்வாரி தூண்டில் வளைவுகள் அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தாழங்குப்பம், சின்னக் குப்பம் உள்ளிட்ட எட்டு மீனவ கிராமத்து மீனவர்கள், இருநூறுக்கும் அதிகமான படகுகளில் அணி அணி யாகச் சென்று, கைகளில் கருப்புக் கொடி ஏந்தி எண்ணூர் துறைமுக நுழைவு வாயிலை முற்றுகை யிட்டு கண்டன கவன ஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அங்கு வந்த கடலோரக் காவல் படை அதிகாரிகள், கரைக்குச் செல்லும்படி மீனவர்களை அறிவுறுத்தினர் இதையடுத்து கரைக்குத் திரும்பிய மீனவர்கள், தாழங்குப்பம் பசாரில் கையில் கருப்புக்கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுபற்றி தகவல் அறிந்து வந்த திருவொற்றியூர் தாசில்தார் சரளா, மாதவரம் காவல்துறை துணை ஆணையாளர் பாலகிருஷ்ணன், எண்ணூர் காவல் துறை உதவி ஆணையாளர் ராஜேந்திரன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது மீனவர்கள், எண் ணூர் காமராசர் துறைமுகம் அமைக்கப்பட்டதால் முகத்துவாரப் பகுதியில் மணல் திட்டு ஏற்பட்டு கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் படகுகள் கவிழ்ந்து இதுவரை எட்டு மீனவர்கள் பலியாகி விட்டனர். படகுகள் சேதம் அடைந்து எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளன. உடன டியாக முகத்துவராத்தை தூர்வாரி மீனவர்கள் கட லுக்கு மீன்பிடிக்கச் செல்ல வசதி செய்து கொடுக்க வேண்டும். கடலரிப்பை நிரந்தரமாக தடுக்க இரண்டு தூண்டில் வளைவுகள் அமைத்துக் கொடுக்க வேண் டும் என்றனர்.

இதுபற்றி தொடர்புடைய அதிகாரிகளுடன் பேசி, உரிய நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதி அறித்தனர். இதையடுத்து ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டு மீன்வர்கள் அனைவரும் கலைந்து சென்றனர். மீனவர்கள் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவாக எண் ணூரில் அனைத்துக் கடைகளும் அடைக்கப்பட்டு இருந்தது. மீனவப் பெண்கள் ஐந்து கிலோமீட்டர் தூரத்திற்கு சாலைகளில் கருப்புக் கொடி ஏந்தி, மனிதச் சங்கிலி போராட்டம் நடத்தினர். மீனவர்களின் இந்தப் போராட்டம் காரணமாக எண்ணூரில் காவலர்கள் குவிக்கப்பட்டு இருந்தனர்.



# மீனவர்கள் போராட்டம்!

**உலகிலேயே சொந்தமாக ரயில் வைத்திருந்த தமிழர்!**





நம் பெருமாள் செட்டியார், உலகிலேயே சொந்தமாக ரயிலை வைத்திருந்த தமிழர்!. முதன் முதலாக வெளிநாட்டு கார் வாங்கிய இந்தியரும் இவரே. அப்போதைய மதராஸ் பல்கலைக்கழகத்தில் பி.ஏ., பட்டம் பெற்றவர். இவர் பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் ஆங்கிலேயருக்கு பில்டிங் கான்ட்ராக்டராக இருந்தார். கட்டிட மேதையான இவர் பாரி முனையில் உள்ள உயர்நீதிமன்றம், சட்டக்கல்லூரி, கன்னிமரா நூலகம், விக்டோரியா பொது மண்டபம் போன்ற பல கட்டடங்கள் கட்டினார். எழும்பூர் பாந்தியன் சாலை முதல் ஹாரிங்டன் சாலை வரையுள்ள நிலப்பரப்பு அப்போது இவருக்குச் சொந்தமாக இருந்துள்ளது. எனவே, அவ்விடம் செட்டியார் பேட்டை என அழைக்கப்பட்டது. பின்னர் நாளடைவில் சேத்பட் என மாற்றப்பட்டது.

தான் வைத்திருந்த ரயிலில் குடும்பமாக திருவள்ளூர் வீரராகவப் பெருமாள் கோவிலுக்குச் சென்று வருவார். மற்ற நேரங்களில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இவருடைய ரயில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். வெள்ளை மாளிகை என்ற பெயருடன் இவர் வாழ்ந்த வீடு, சென்னை சேத்பட் மேம்பாலம் அருகே தற்போது அருங்காட்சியகமாக உள்ளது. தனது வருமானத்தில் பல பகுதிகளை வைணவக் கோயில்களின் திருப்பணி, ஏழைகளின் கல்வி, மருத்துவம் போன்ற பல நற்காரியங்களக்குக் கொடுத்து உதவினார். தாட்டிக்கொண்ட நாச்சாரம்மா மருத்துவமனை இவரது அறக்கட்டளை மூலம் நடந்து வருகிறது. இவ்வாறு சென்னையின் வளர்ச்சியில் இவரின் பங்களிப்புகள் பல இருந்தன.

நன்றி : **சோழநாச்சியார்**


**விளம்பரக் கட்டண விபரம்**

**முன்னட்டை உள்ளே ரூ.** 10,000/-
**(முழுப்பக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ.** 10,000/-
**(முழுப்பக்கம்)**
**பின்னட்டை ரூ.** 15,000/-
**(முழுப்பக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ.** 5,000/-


# நாடறிவோம்!

*சியரா லியோன் குடியரசு, இது மேற்கு ஆப்பிரிக்க நாடாகும். அட்லாண்டிக் கடலின் கரையில் அமைந்திருக்கிறது. வடக்கிலும் கிழக்கிலும் கினியா நாடு. தெற்கே லைபீரியா, மேற்கே அட்லாண்டிக் கடல் இதுவே இந்நாட்டின் நாற்புற எல்லைகள்.*


*71,740 சதுர அடிகளைக் கொண்ட சியரா லியோன் குடியரசில் 5.6 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். இந் நாட்டின் மொழி ஆங்கிலம், சில இடங்களில் நாட்டுப்புற மொழிகள் பேசப்படுகின்றன. இந் நாட்டின் மக்கள் இசுலாம், கிறித்தவ சமயத்தவர்களாக இருக்கிறார்கள்.*

*இந்நாட்டின் நாணயத்தின் பெயர் லியோன். இங்கே அரிசி, கோகோ, காப்பி, இஞ்சி, ஆரஞ்சு போன்றவை அதிகமாக விளைகின்றன. வைரம், இரும்புத்தாது, பாக்சைட் போன்ற கனிம வளங்கள் சியலா லியோன் குடியரசில் கிடைக்கின்றன. இந்நாட்டின் வருமானம், விவசாயத்தையும், கனிமவளங்களையும் சார்ந்தே இருக்கிறது.*

*இங்கே இராணுவ அரசுதான் இயங்கிவருகிறது. பிரிடவுன், மாகெளி, மொயாம்பா போன்ற பெரிய நகரங்கள் உண்டு. சிவா, ஜோங், ராகெல் என்ற ஆறுகள் இந்நாட்டில் ஓடுகின்றன. இந்நாட்டின் தலைநகர் பிரிடவுன். இந்நாடு 27/4/1961 இல் விடுதலை அடைந்தது. இந்நாட்டில் இந்தியத் தூதரகம் உண்டு. இந்தியத் தூதரகம் டெஹ்ரானில் செயல்படுகிறது.*

**வேல்பொன்முடி.**





# சமற்கிருதம் ஒரு மொழியே இல்லை!

சமற்கிருதம் என்ற மொழி? இந்தோ யூரோப்பியன் மொழிக் குடும்பத்தில் ஒரு மொழியாகக் கருதப்படு கிறது. இதிலிருந்து தான் இந்தி போன்ற பல மொழிகள் தோன்றியதாகப் பல காலமாகச் சொல்லப்படுகிறது. இந்த மொழியைப் பற்றி, பலவிதமான முரண்பட்ட கருத்துகள் நிலவுகின்றன.

தற்போது சில இந்தோ யூரோப்பியன் மொழியி யலாளர்கள் ‘சமற்கிருதம்’ என்று ஒரு மொழியே எக் காலத்திலும் இருந்ததில்லை என்ற ஒரு கருத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். அவர்களின் சுவையான கேள்விகள் இதோ!

எந்த ஒரு மொழியும் தோன்ற, ஒரு இனம் தேவை. இனமில்லாமல் எந்த மொழியும் தோன்ற முடியாது. எடுத்துக்காட்டாக, ஜப்பானியர்கள் சப்பானிய மொழியைத் தோற்றுவித்தார்கள். அதுபோல், தமிழர் தமிழையும் செர்மானியர்கள் செர்மன் மொழியையும் தோற்றுவித்தார்கள். சமற்கிருதத்தை எந்த இனம் தோற்றவித்தது?

இரண்டாவதாக, எந்த ஒரு மொழியும் பேசப் பட்டால்தான் மொழியாகும். பேசப்படவில்லை யென்றால் அது குறியீடு எனப்படும். எந்த இயல்பான மொழியும் பேச்சில் முதலில் தொடங்கி. பின்னர் பெரு வளர்ச்சி அடைந்த பின்தான் எழுத்து வடிவம் பெறமுடியும். பேச்சு நிலையையே தொடாத எந்த ஒரு இயல்மொழியும் எழுத்து வடிவாகி, ஒரு இலக்கியமாக ஆக முடியவே முடியாது.

சமற்கிருதம் என்ற மொழி எந்த கால கட்டத் திலும் பேசப்பட்டதாக, எந்த விதமான சான்றுகளும் இல்லை. அப்படி அது பேசப்பட்டிருந்தால், இப்போது சமற்கிருத்திற்காக உயிரையே விடத் தயாராக இருக்கும் சிறு வகுப்பினராவது இன்னும் அதைப் பேசிக் கொண்டிருப்பார்கள். ஆனால், அப்படி இல்லை. தமிழ் பிராமணரே இப்போது சமற்கிருதம் பேசுவதில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்தியாவின் தற்போதைய பிராமணர் ஜனத் தொகை சுமார் 5 விழுக்காடு என்று சொல்லப்படுகிறது. இது சுமார் ஆறு கோடி மக்கள் எனலாம். இந்த ஆறு கோடி மக்களும் முதலில் சமற்கிருதம் பேசியிருந்தால், அதில் குறைந்தது ஒரு கோடி மக்கள் இப்போதும் பேசிக் கொண்டிருக்க வேண்டும். அப்படியென்றால் ஏன் தற்போது ஒரு பத்து லட்சம் மக்கள் கூட சமற்கிருதம் பேசுவதில்லை?

ஒருக்கால், பேசிக்கொண்டிருந்த மொழி அழிந்து விட்டது என்று சொன்னால், பேசிக் கொண்டிருக்கும் எந்த மொழியும் நேராக அழிவதில்லை என்ற உண்மையைத் தெரிந்து கொள்வோம். முதலில் அதைப் பேசும் மக்கள் அழிய வேண்டும். அப்போதுதான் அவர்கள் பேசும் மொழி அழியத் தொடங்கும். அது முதலில் ‘அழிவின் விளிம்பு மொழியாக மாறி, சில 1000 மக்கள் பேசும் மொழியாகி, பின்னர் சில 100 மக்கள் பேசும் மொழியாகி, பின்னர் ஒரு குடும்பம் பேசும் மொழியாகி, கடைசியில் ஒருவர் பேசும் மொழியாகி இறுதியில் முற்றிலும் அழிந்து போகும். எடுத்துக்காட்டாக பிரேசிலில் ‘வாரிக்கென’ என்ற மொழியை இப்போது இருபது பேர்தான் பேசு கிறார்கள். இந்த இருபது பேரின் காலத்திற்குப் பிறகு அது அழிந்து போகும்.

சமற்கிருதம் இவ்வாறாக அழிவின் விளிம்பு மொழியாக எந்தக் கால கட்டத்திலும் அறிவிக்கப் பட்டு இருந்ததே இல்லை என்பதை இந்த விளிம்பு நிலை மொழிப் பட்டியல் உறுதி செய்கிறது. ஏனென் றால் சமற்கிருதம் எப்போதுமே பேசப் பட்டதே இல்லை என்பதால்தான்.

சமற்கிருதம் மிக உயர்ந்த மொழி என்று சொல்லப் படுவதால் அது எப்போதாவது பேசப்பட்டிருந்தால், அதைப் பேசியவர்கள் ஒருபோதும் அதை நிறுத்தி யிருக்க வாய்ப்பில்லை. வீட்டிலாவது பேசிக் கொண்டி ருப்பார்கள். எந்த மொழியும், ஆண், பெண் இருவரும் பேச உரிமை உள்ளதாகத்தான் இருக்கும். அனால், சமற்கிருதம் பேச பெண்களுக்கு தடையுள்ளது பற்றி நாம் எல்லோரும் அறிந்ததே. ஆக, பெண்களிடம் பேச முடியாத, பெண்கள் பேச முடியாத ஒன்று, பேச்சு மொழியாக இருந்திருக்க வாய்ப்பே இல்லை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இவையெல்லாம் கணக்கில் கொண்டால் சமற்கிருதம் என்பது பேசப்படாத மொழி என்பது தெளிவாகிறது. பேசப்படாதது எக்காலத் திலும் மொழி ஆகாது. ஆனால் எழுதப்படாதது மொழி ஆகலாம். பல மொழிகள் பேச்சு வழக்கில் இருந்தும் எழுத்துக்கள் இன்றி உள்ளன.

மூன்றாவதாக, மொழி என்றால் அது 'தாய்' பேசும் மொழியாகக் கட்டாயம் இருக்க வேண்டும். அதனால்தான் 'தாய் மொழி' என அழைக்கப்படுகிறது. இந்து மத விதிகளின்படி பெண்கள் அதாவது தாய்மார்கள் சமற்கிருதம் சொல்ல அனமதி இல்லை. ஆக, சமற்கிருதம் தாய் மொழியாக வாய்ப்பே இல்லை என்கிறார்கள் இவர்கள்.

ஆக, சமற்கிருதம் என்பது ஒரு இயல்பு மொழி அப்படியென்றால் அது தான் என்ன? சமற்கிருதம் என்பது உண்மையில் ஒரு இரகசியக் குறியீடு மொழிதான். சாவா, கோபால் போன்ற கணினி குறியீடு மொழி போல அது பேசும் மொழி அல்ல. குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கு மட்டும் புரியம் இரகசியக் குறியீட்டு மொழி அது.

அந்த குறியீட்டு மொழியில் பல இலக்கியங்களை யும் படைப்புகளையும் தகவல்களையும் ஒரு சாராருக்கு மட்டும் புரியும்படியாக உருவாக்கியிருக்கிறார்கள். அடுத்தது, பேசப்படாத மொழி பேசப்படும் மொழி களுக்குத் தாயாக முடியுமா என்ற கேள்வி எழுகிறது. பேசப்படாத மொழி எதுவும் பேசப்படும் மொழிகளுக் குத் தாயாக ஆக முடியாது என்பது மறுக்க முடியாத உண்மை. ஏனென்றால், பேசப்படாத மொழி பரவ ஒருபோதும் வாய்பில்லை என்பதால்தான்.

பேசப்படாத ஒரு மொழி, சொற்களைப் பிறப்பிக்க முடியுமா என்பது அடுத்த கேள்வி. முடியாது என்பது தெளிவு. பேச்சு வழியாகத்தான் சொற்கள் தோன்ற முடியும் என்பது தெளிவு. பேச்சு வழியாகத் தோன்றிய சொற்கள்தான், பின்னர் எழுத்து வடிவில் வரும் என்பது உண்மை.

சமற்கிருதம் பேசும் மக்கள் இல்லாமல் சமற்கிருதச் சொற்களை யார் உண்டாக்குவார் என்ற கேள்வி அடுத்து எழுகிறது. சமற்கிருதம் பேசும் மக்கள் இல்லாமல் சமற்கிருதச் சொற்களை மற்ற மொழி பேசுபவர்கள்தான் உருவாக்கியிருக்க முடியும் என்பது தெளிவு. ஆக, தமிழைத் தாய்மொழியாக பாவிக்கும் தமிழ் பிராமணர்களே சமற்கிருதச் சொற்களைத் தமிழிலிருந்து உருவாக்கியிருக்கக் கூடும்.

மேற்கூறிய காரணங்களால் சமற்கிருதம் என்று ஒரு மொழி இருந்ததாகச் சொல்லப்படுவது உண்மை யல்ல என்பது தெளிவாகிறது.

இந்த மொழியியலாளர்கள் இந்தக் கருத்துகளை ஆர்வர்ட் பல்கலைக் கழக மொழியிருக்கைக்குச் சமர்ப் பிக்க இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதை மறுத்து இதுவரை எந்த சமற்கிருத வல்லுநரும் பதில் அளிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பகிரி பதிவு

## சுவடிகளுக்கு உயிர் தந்த புத்த துறவி.

படகோட்டி ஒருவர், துறவி ஒருவரை ஏற்றிக் கொண்டு அக்கறை சென்றார். படகு நிறைய ஓலைச் சுவடிகள் இருந்தன. அந்தத் துறவி இரவு பகலாக பல இடங்களில் அலைந்து தேடி தம்முடைய மடத் திற்கு சுவடிகளை எடுத்துச் சென்று கொண்டிருந்தார். மடத்தை நெருங்க சிறு தூரமே இருக்கும்போது, ஆழ மான பகுதியில் பாரம் தாளாமல் படகு கவிழ இருந்தது.

படகோட்டி, துறவியிடம், ஐயா பாரம் சமநிலைப் பட வேண்டுமானால் இரண்டு மூன்று ஓலைச்சுவடிக் கட்டுகளைத் தண்ணீரில் போட்டு விடுகிறீர்களா? இல்லையேல் நாம் பிழைக்க மாட்டோம் என்றார். அவ்வளவுதானே, இந்த ஓலைச்சுவடிகளை அந்த மடத்தில் கொடுத்து விடுங்கள், பாரம் குறைய நான் இறந்தாலும் பரவாயில்லை என்று கூறிக் கொண்டே படகி லிருந்து தொப் என்று குதித்துவிட்டார் துறவி. பதறிப் போன படகோட்டி விடுவிடுவென்று ஓலைச்சுவடிகளைக் கரையில் சேர்த்து விட்டு மீண்டும் வந்து தத்தளித்துக் கொண்டிருந்த துறவியைக் காப்பாற் றினாராம். அந்தப் பயணிதான் சீனாவிலிருந்து இந்தியா விற்கு வந்த புத்தத் துறவி யுவான் சுவாங்.

தான் இறந்தாலும் பரவாயில்லை, இந்திய ஒன்றியத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு, சிறப்புகள் பற்றி உலக நாடுகள் அறிவதற்குக் காரணமான ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பதில் அவருக்கு இருந்த ஈடு பாடும், உயர்ந்த நோக்கமும், தியாகமும் இந்தியராகிய நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து போற்றப்பட வேண்டியதோடு பின்பற்றவும் வேண்டிய ஒன்றாகும்.

நன்றி : **தமிழர் சமயம்.**




# தமிழக அரசு வரைவுகள்!

அரசு அலுவலக வரைவுகளில், நம்மில் சிலர் தமிழ்ச் சொற்களைத் தவறாகப் பயன்படுததுவதைப் பரவலாகக் காண்கிறோம். அவ்வாறான சில வரைவுகளில் எவை தவறு, எவை சரி என்பன குறித்து நான் அறிந்தவற்றையும், தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் தெரிந்துர்ணந்து சிலவற்றையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1. செயல்முறை ஆணைகள் வரையும் போது பதவிப் பெயருக்குப் பின்னால் ‘அவர்களின்’ என்கிற வார்த்தை தவிர்க்கப்பட வேண்டும். உதாரணமாக, கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்களின் செயல்முறைகள் என்பது தவறு. கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், வட்டார வளர்ச்சி அலுவலரின் (வ.ஊ) செயல்முறைகள் என்பது சரி.

இதற்குப் பின்னர், முன்னிலை என்பது தவறு. ஆணை பிறப்பிப்பவர் திருமதி. இரா. விமலா என்று எழுத வேண்டும்.

2. இதோடு நாம் அன்றாட அலுவல் வரைவுகளில் தவறாகப் பயன்படுத்தும் சில சொற்களையும்/ வாக்கியங்களையும் அவற்றுள் எது தவறு, எது சரி என்பதையும், இணையான தமிழ்ச் சொற்களையும் பின்வருமாறு தருகிறேன்.

பார்வை 1 ல் கண்ட = தவறு

பார்வை 1 இல் கண்டுள்ள = சரி

30 ம் தேதி என்பது தவறு

30 ஆம் தேதி என்பது சரி.

கடிதப் பொருள் குறித்து எழுதும் போது அதன் இறுதியில் குறித்து, சார்பாக என்று எழுதுதல் தவறு.

தொடர்பாக என்று எழுதுவதே சரி.

ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு = தவறு

ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு = சரி

பயணத்திட்டம் = தவறு

பயண நிரல் = சரி

அய்யா = தவறு

ஐயா = சரி

ஊதியப் பட்டியல் = தவறு

ஊதியப் பட்டி = சரி

அனுப்புனர் = தவறு

அனுப்புநர் = சரி

இயக்குனர் = தவறு

இயக்குநர் = சரி

நகல் = தவறு

படி = சரி

கட்டிடம் = தவறு

கட்டடம் = சரி

விபரம் = தவறு

விவரம் = சரி

ஆவண செய்யுமாறு = தவறு

ஆவன செய்யுமாறு = சரி

(சிலர் ஆவணம் செய்யுமாறு என்று கூட எழுதி விடுகின்றனர். அது தவறு)

நிர்வாகம் = தவறு

நிருவாகம் = சரி

பொருப்பு = தவறு

பொறுப்பு = சரி

விடுமுறை விண்ணப்பம் = தவறு

விடுப்பு விண்ணப்பம் = சரி

ஆரம்பம், துவக்கம் = தவறு

தொடக்கம் = சரி

அனுமதி = தவறு

இசைவு = சரி

தமிழில் சிறந்த குறிப்புகள், வரைவுகள் எழுதும் அரசுப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் மாவட்ட நிலை, சார்நிலை, தன்னாட்சி நிறுவனங்கள், உள்ளாட்சித் துறையின் சார்நிலை அலுவலகப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்று, அவர்களுக்கு முறையே முதற்பரிசாக ரூபாய் மூன்றாயிரம், இரண்டாம் பரிசாக ரூபாய் இரண்டா யிரம், மூன்றாம் பரிசாக ரூபாய் ஆயிரம் வழங்கப்படு கின்றன. இதே போன்று தெரிவு செய்யப்பெற்ற தலைமைச் செயலகத் துறைகள், துறைத்தலைமை அலுவலகங்கள், அரசுப் பொதுத்துறை நிறுவனத் தலைமை அலுவலகப் பணியாளர்களுக்கும் ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் 1956 இல் இயற்றப் பட்டது.

அரசு ஊழியர்கள் தமிழில்தான் கையெழுத்திட வேண்டும் என்ற அரசாணை எண். 1134, நாள்: 2106 1978 இல் ஆணையிடப்பட்டுள்ளது.

# உலகிற் சிறந்த தமிழ்!




சிங்கப்பூரில் இந்தியர் என்பது தமிழர் தான்.

மலேசியாவில் இந்தியர் என்பது தமிழர் தான்.

மொரீசியஸில் இந்தியர் என்பது தமிழர் தான்.

இலங்கையில் இரண்டாவது ஆட்சி மொழியாக இருக்கிறது. பாஸ்போர்ட்டில் கூட தமிழ் இருக்கிறது.

மலேசியாவிலும் அரசு நிர்வாகம் மற்றும் அமைச் சர்களாக தமிழர்கள்தான் கோலோச்சு கின்றனர்.

சீன கம்னியூஸ்ட் அரசு இந்திய மொழிகளில் தமிழை மட்டும் தான் வானொலி சேவையாக வழங்கி வருகிறது.

கனடாவில் தமிழர் நாள் என்று ஒரு நாளை அரசே கொண்டாடுகிறது.

ஜப்பானில் தமிழில் அறிவிப்புப் பலகைகளை அரசு வைத்துள்ளது.

ஆறுக்கும் மேற்பட்ட நாடுகளில் இந்திய மொழிகளிலேயே அலுவல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரே இந்திய மொழியாக அந்தஸ்த்துடன் தமிழ் தான் சிறப்பாக இருக்கின்றது.

பன்னிரெண்டு நாடுகளில் தமிழை அலுவல் மொழியாக்கும் பணிகளில் அந்தந்த அரசாங்கங்கள் ஈடுபட முனைந்திருக்கின்றன.

உலகத்தை உண்மையாகவே இணைந்திருந்து இந்தியாவை அடையாளப்படுத்த வேண்டுமென்றால் இந்திய ஒன்றியம் முழுவதும் பாட மொழியாக தமிழை வையுங்கள். இந்திய ஒன்றியத்தை, உலகிற்கு தமிழ் அடையாளப்படுத்தும்.

# புனித ஜார்ஜ் கோவில் வரலாறு

புனித ஜார்ஜ் கோவில் என்பது முன்னாள் ஆங்கிலிக்கன் சபை, இந்நாள் தென்னிந்தியத் திருச்சபையின் சென்னை மறைமாவட்ட முதன்மைக் கோவில் ஆகும். இக்கோவில் 1815ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

இக்கோவிலின் வரலாறு, சென்னை நகரோடும் இந்திய ஒன்றியத்தோடும் இணைந்த கிறித்தவ வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையது ஆங்கிலிக்கன் சபை, மெதடிஸ்டு சபை, பிரெஸ்பிட்டேரியன் சபை மற்றும் கான்ங்ரகேசனல் சபைகள் ஒன்றிணைந்து தேன்னிந்தியத் திருச்சபை என்னும் ஒன்றிப்புச்சபை இக்கோவிலில் தான் 1947, செப்டம்பர் மாதம் தொடங்கியது. அப்போது நடந்த நிகழ்ச்சியில் இக்கோவில் நிரம்பி வழிந்ததோடு, வெளியே எழுப்பபட்ட பந்தலில் 2000க்கும் மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். உலக அளவிலேயே பல திருச்சபைகள் ஒன்றிணைந்து ஒன்றிப்பு முயற்சியைத் தொடர இந்தத் திருச்சபை ஒன்றிப்பு வழிகோலியது.

புனித ஜார்ஜ் கோவிலின் கோபுரம், தூண்கள், பளிங்குச் சிலைகள், சுவர் ஓவியங்கள், நினைவுக் கல்லறைகள் போன்றவை அதற்குச் சிறப்பாக அமைந்துள்ளன. பரந்து விரிந்த ஒரு படிக்கட்டில் ஏறி, கோவிலுக்குள் நுழையலாம். தலைசிறந்த கலையழகோடும் கட்டட நுணுக்கத்தோடும் அமைந்த இக்கோவிலில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் பிரித்தானிய காலத்தில் ஆட்சி செய்த ஆளுநர்கள் தம் குடும்பத்தோடு வழிபாட்டில் பங்கேற்றனர். அது போலவே, அரசுப் பதிலாள்கள் சென்னைக்கு வருகை தந்த போது அங்கு வழிபட்டனர். இக்கோவில் 1815ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. கட்டடத்தை எழுப்ப மக்களே நிதி உதவி அளித்தார்களாம். இதைக் கட்டி முடிக்க அக்காலத்தில் 41,709 பொற்காசுகள் (பகோடாக்கள்) செலவாயின. கோவிலின் உள்ளே செய்யப்பட்ட மரவேலைகள், குழலிசைக் கூடம் (பைப் ஆர்கன்) கட்டடக் கலைஞர்களுக்கு அளிக்கப்பட்ட ஊக்க ஊதியம் ஆகியவற்றைக் கணக்கிட்டால் மொத்தச் செலவு 57,225 பொற்காசுகள். ஒரு பொற்காசு (பகோடா) இந்திய ரூபாய் மதிப்பில் 3.50 என்று கணக்கிடப்படுகிறது.

பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பெனியின் மூத்த கட்டடக் கலைஞர் கர்னல் ஜே.எல்.கால்டுவெல் கோவில் கட்டடத்தின் முன்வரைவை ஆக்கினார். துணைக் கட்டடக் கலைஞர் தே ஹாவில்லாண்ட் கோவில் கட்டடத்தை நிறைவுக்குக் கொண்டுவந்தார். இவரே சென்னையில் அமைந்த மற்றொரு புகழ்மிக்க வழிபாட்டுத் தலமாகிய புனித அந்திரேயா கோவிலையும் கட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோவில் அமைந்திருக்கும் இடம் சத்திரப்பாக்கம் என்று அழைக்கப்பட்டது. பிரித்தானியர் அக்கோவிலில் 1815 லிருந்தே வழிபட்டாலும் 1816, சனவரி 6ஆம் நாளில்தான் கல்கத்தாவின் முதல் ஆங்கிலிக்கப் பேராயர் மேதகு தாமஸ் பேன்ஷா மிட்டில்டன் அக்கோவிலை 'இங்கிலாந்து திருச்சபையின் மரபுக்கு ஏற்ப இறைபணி நிகழ்த்த' அர்ச்சித்தார்.

நன்றி : **சமாதான நற்செய்தி** (செய்தித்தாள்)



"நான் பயோடெக்னாலஜி துறையில் முனைவர் பட்டம் பெற்றுள்ளேன். இப்போது கும்பகோணம் அன்னை அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மருத்துவக் குழுமத்தின் இயக்குநராகப் பணியாற்றி வருகிறேன்.

என்னிடம் என் மாணவர்களும் எனது நண்பர் களும் 'இன்னும் கொரோனாவிற்கு மருந்து ஏன் கண்டு பிடிக்கவில்லை? இந்தக் கொரோனா வைரஸ் கிருமித் தொற்றிலிருந்து நம்மை எப்படிப் பாதுகாத்துக் கொள்வது? என விளக்கம் கேட்டனர்.

கொரோனா வைரஸ் கிருமித் தொற்று பற்றி எனக்குத் தெரிந்த, அறிந்த உயிரியல் விளக்கத்தைக் கூறிகிறேன்.

முழுமையான உயிர் பெறாத ஒரு அரைகுறை உயிரிதான் கொரோனா வைரஸ். ஒரு ஆர்என்ஏ (நமது செல்களில் ஜீன் எனப்படும் டிஎன்ஏ இருப்பது மாதிரி வைரஸ்களின் இருப்பது டிஎன்ஏ வின் அரைகுறை வடிவமான ஆர்என்ஏ) அதைச்சுற்றி ஒரு புரதம் மற்றும் கொழுப்பு சேர்ந்த ஒரு உறைதான் கொரோனா வைரஸ் (ஆல்ககால் கொண்ட சானி டைசர்கள், சோப்பு நுரை பட்டால் இந்த உறை கரைந்து வைரஸ் அவுட்) அந்த உறையின் மீது ஆங்காங்கே முட்கள். இதுதான் கொரோனா வைரஸ்.

இந்த முட்களின் வேலை எளிதாக எதிலும் ஒட்டிக் கொள்வதே. இந்த முட்களும் புரதத்தால் ஆனவையே. கொரோனா வைரசில் இந்த முட்கள் பார்ப்பதற்கு கீரிடத்தில் இருக்கும் வேலைப்பாடு போல இருப்பதால் இந்த வைரசுக்கு கொரோனா வைரஸ் என்று பெயர். இதை ஏன் அரைகுறை உயிரி என்கிறோம்? இந்த வைரஸ்களால் தானாக வாழ முடியாது. இது ஒரு முழுமையான ஒட்டுண்ணி. ஏதோ ஒரு உயிரினத்தின் செல்லுக்குள் புகுந்து அந்த செல்லில் இருக்கும் திட திரவப் பொருட்களையே உணவாக்கிக் கொண்டு பல்கிப் பெருகுவதுதான் வைரஸ்களின் வேலை.

செல்லுக்கு வெளியே சில மணி நேரமோ அல்லது சில நாட்களோ தான் இதனால் தாக்குப் பிடிக்க முடியும். இந்த வைரஸ், மூக்கு, வாய் அல்லது கண் வழியாக உள்ளே நுழைந்தவுடன் முதலில் தொண் டைப் பகுதியைத் தாக்குகிறது. தொண்டையில் உள்ள திசுக்களின் செல்களில் இது பல்கிப் பெருகியவுடன்

# முழுமையான உயிர் பெறாத ஒரு அரைகுறை உயிரிதான்

# கொரோனா வைரஸ்





தான் தொண்டை வலியும் இருமலும் தொடங்குகிறது. இந்த வைரஸ்களை எதிர்த்து நம் உடலின் எதிர்ப்பு ஆற்றல் (Immune system) உடனே மோதலைத் தொடங்குகிறது. அந்த மோதலின் அறிகுறிதான் காய்ச்சல்.

பெரும்பாலான வைரஸ்கள் அதிக வெப்ப நிலையைத் தாங்க முடியாதவை என்பதால், உடலின் வெப்ப நிலையை உயர்த்தி வைரஸ்களை காலி செய்ய நமது உடலின் எதிர்ப்பு ஆற்றல் முயற்சிக்கிறது. இந்த மோதலின்போதே பெரும்பாலான வைரஸ்களை நமது உடல் கொன்று விடுகிறது. கொரோனா வைரஸ் உட்பட. நமது உடலின் Immune system ஒரு மாபெரும் பாதுகாப்பு அரண். வைரசோ, பாக்டீரியாவோ அல்லது வேறு நுண்ணுயிரிகளோ உடலுக்குள் புகுந்தவுடன் அவற்றை நமது உடல் இரு வகையான காரணிகளை வைத்து அடையாளம் கண்டுபிடிக்கிறது.

முதலாவது அந்த நுண்ணியிரி வெளியிடும் வேதியியல் பொருட்கள், இரண்டாவது அந்த நுண்ணுயிரியின் உருவம். இது வெளியில் இருந்து வந்த பொருள் என்பதை கண்டுபிடித்த உடனே நமது ரத்தத்தின் வெள்ளை அணுக்கள் அவற்றை கொல்லும் வேலையில் இறங்குகின்றன. வைரஸ், பாக்டீரியாவை அப்படியே விழுங்கி ஏப்பம் விடும் வேலைக்கு Macrophages, Neutrophils போன்ற அடியாட்கள் வெள்ளை அணுக்கள் அனுப்புகின்றன.

ஆனால், இதையும் தாண்டி வைரசோ, பாக்டீரியாவோ உடலை பதம் பார்க்க ஆரம்பித்தால், அடுத்த கட்ட அரண்கள் வேலையில் இறங்கும். அதில் ஒன்று Innate lymphoid cells. இதன் ஒரு பிரிவான T- Killer cellகளின் வேலை வைரஸ்களால் பாதிக்கப்பட்ட உடல் செல்களைக் கொன்று, வெளியேற்றி உடல் திசுக்கள் மேலும் மோசமடையாமல் தடுப்பது. மேலும், வைரஸ்களுக்கு உணவாகிக் கொண்டிருக்கும் செல்களின் எண்ணிக்கையைக் குறைப்பது. இதுதான் இதன் வேலை.

அதே நேரத்தில் Macrophages, Neutrophils போன்றவற்றால் தடுக்க முடியாத வைரஸ்களை ஒழித்துக் கட்ட நமது உடல் அனுப்பும் முக்கிய ஆயுதம் தான் வைரஸ்களைத் தாக்கும் செல்கள். இந்த செல்கள் வைரஸ்களின் உருவத்தை அடையாளம் கண்டு, அதன் மீது ஒட்டிக் கொண்டு, அப்படியே இழுத்துச் சென்று Lumph nodes எனப்படும் நிணநீர் சுரப்பிகளில் வைத்து, அங்கு சுரக்கும் ரசாயணங்கள் உதவியோடு வைரஸ்களைக் கொல்லும்.

இந்த உடல் எதிர்ப்பு ஆற்றல் ஒருபக்கம் இருக்க, தொண்டைப்பகுதியை அடைந்த கொரோனா வைரஸ்கள் அடுத்ததாக நமது உடலைப் பாதிப்பது நுரையீரலை. நுரையீரலின் உள் சுவற்றில் இருப்பவை மிக லேசான பில்லியன் கணக்கான எபிதீலியல் செல்கள். இந்த செல்களில் கொரோனா வைரஸ் ஒட்டிக் கொண்டு, துளை போட்டு தனது ஆர்என்ஏவை உள்ளே நுழைக்கும்.

இந்த ஆர்என்ஏ செல்லுக்குள் போய் லட்சக் கணக்கில் தனது பிரதிகளை ஜெராக்ஸ் மெசின் மாதிரி காப்பி எடுக்கும். இந்த ஒவ்வொரு ஆர்என்ஏவும் ஒரு வைரசாக மாறும். அந்த செல் முழுக்கவே வைரஸ்களால் நிறையும்போது, அந்த செல்லே வெடித்து மடியும். அந்த வெடிப்பில் இருந்து கிளம்பும் லட்சக் கணக்கான வைரஸ்கள் அடுத்தடுத்த செல்களை இதே போல தாக்கி அழித்து, பல்கிப் பெருகும்.

பத்து நாட்களில் நுரையீரலின் பெரும்பாலான செல்களை இந்த வைரஸ் ஆக்கிரமிக்கும். இதுவரையும் கூட பிரச்சனை அதிகமில்லை. ஆனால், இந்த வைரஸ்களை அழிக்க நமது உடலின் Immune cells எனப்படும் எதிர்த்தாக்குதல் செல்கள் நுரையீரலில் நுழைந்து தாக்க ஆரம்பிக்கும்போது தான் பிரச்சனையே துவங்குகிறது. மற்ற வைரஸ்களில் இருந்து கொரோனா இங்கேதான் மாறுபடுகிறது.

இந்த கொரோனா வைரஸ், நமது உடலின் எதிர்த் தாக்குதல் செல்களுக்குள்ளேயே நுழைந்து அதையும்

சேதப்படுத்துகின்றன. சேதப்படுத்துவதோடு மட்டு மல்ல, அந்த செல்களின் ஜீன்களில் குழப்பத்தையும் ஏற்படுத்துகின்றன. நமது Immune cells செல்கள் ஒன்றோடு ஒன்று தகவல் பரிமாறிக் கொள்வது சைட் டோகைன்ஸ் (Cytokines) எனப்படும் ஒரு வேதிப் பொருள் மூலம்தான்.

ஜீன்கள் பாதிக்கப்பட்ட எதிர்த்தாக்குதல் செல்கள் குழப்பமான சைட்டோகைன் தகவல்கள் அனுப்ப, நுரையீரலைப் பாதுகாக்கக் கிளம்பி வரும் Neutrophils செல்கள், கொரோனா வைரஸ்களுக்கு பதிலாக உட லின் எதிர்ப்பு ஆற்றல் செல்களை தாக்க ஆரம்பிக்கும்.

அதே போல பாதிக்கப்பட்ட நுரையீரல் செல் களை தற்கொலை செய்ய வைத்த நோய் மேலும் பரவாமல் தடுக்க வேண்டிய வேலைக்காக வரும் T-Killer cell கள் வந்த வேலையை விட்டுவிட்டு, நன்றாக இருக்கும் நுரையீரல் செல்களை அழிக்கச் சொல்லி தகவல் தரும். இதனால் நுரையீரல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி, அடுத்ததாக பாக்டீரியா தாக்குதல், நிமோ னியா உள்ளிட்ட தொற்று நோய்களுக்கு ஆளாக நேரிடும்.

இந்த இடத்தில் தான் மரணங்கள் நிகழ்கின்றன. இப்படி உடலின் எதிர்ப்பு ஆற்றலை நமது உடலுக்கு எதிராக திருப்பி விடுவதில்தான் கொரோனா வைரசின் முழு சக்தியும் அடங்கியுள்ளது. வைரசின் உருவத்தை வைத்து அடையாளம் காணும் B- cell கள் கூட கொரோனவிடம் இதுவரை எளிதில் வெற்றியை ஈட்டவில்லை.

இந்த வைரஸ்கள் அனுப்பும் வேதியல் தகவல்கள் (Cytokines) எல்லா நேரமும் ஒரே மாதிரியாக இல்லை. அவை லட்சக்கணக்கான வகைகளில் மாறிக் கொண்டே இருப்பதால் T-killer cells, B cells அகிய வற்றால் இவற்றை சரியாக அடையாளம் காண முடியவில்லை. இதுதான் இந்த வைரசுக்கு எதிராக மருந்தோ தடுப்பு ஊசியோ தயாரிப்பதில் பெரும் சிக்கலை ஏற்படுத்தி வருகிறது.

நாம் உண்ணும் அல்லது ஊசி மூலம் போட்டுக் கொள்ளும் மருந்துகள் உடலுக்குள் சென்றவுடன் வேதியியல் தகவல்களாக மாறித்தான் நோயை ஏற்படுத்தும் கிருமிகளோடு நேரடியாக மோதுகின்றன, அல்லது உடலின் Immune system உடன் பேசி, வேண்டிய எதிர்ப்பு மருந்தை உடலையே தயாரிக்க வைக்கின்றன.

ஆனால், கொரோனா நமது உடல் எதிர்ப்பு ஆற்றல் சிஸ்டத்தையே தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சென்று விடுவது தான் இந்த வைரசுக்கு எதிராக எந்த மருந்தை வைத்துப் போராடுவது என்ற குழப்பத்தில் மருத்துவ உலகை ஆழ்த்தியுள்ளது. கொரோனா வைரஸ்களின் கெமிக்கல் தாக்குதல் களால் குழம்பிப்போன T-killer cells,

B cells களும் ஏற்கனவே கொரோனா பாதித்த நுரையீரல்களை மேலும் பாதித்து உலகெங்கம் உயிரிழப்புகளை ஏற்படுத்தி வருகின்றன.

ஆனால், ஏற்கனவே நுரையீரல் பிரச்சினை, நோய் எதிர்ப்பு ஆற்றலில் பிரச்சனை உள்ளவர்களில்தான் இந்த உயிரிழிப்புகள் அதிகமாக ஏற்படுகிறது. நல்ல உடல் நிலையில் உள்ளவர்களுக்கு பிரச்சனை குறை வாகவே உள்ளது. உடலில் கொரோனா வைரஸ் ஏற்படுத்தும் பெரும் குழப்பத்துக்கிடையிலும் பெரும் பாலான நேரங்களில் நமது உடல் எதிர்ப்பு ஆற்றல் சிஸ்டம் கொரோனா வைரசை தோற்கடித்துவிடுகிறது.

நீரிழிவு நோய் உள்ளவர்களின் ரத்தத்தில் அதிக மாக இருக்கும் சர்க்கரையால் உடலின் எதிர்ப்பு ஆற்றல் முடங்குகிறது. அதே போல இதயக் கோளாறு, பி.பி உள்ளவர்களின் உடலில் நுண்ணிய ரத்தக் குழாய்கள் போதிய ரத்தத்தை எடுத்துச் செல்வதில் சிக்கல் வருவதால், உடலின் எல்லாப் பகுதிக்கும் போதிய ஆற்றல் கிடைப்பதில்லை. நோய் எதிர்ப்பு ஆற்றல் உள்பட. ஆனால், சர்க்கரை அளவும் பிபியும் மருந்துகள், உடற்பயிற்சி மூலம் கட்டுப்பாட்டில் உள்ளவர்களுக்கு பிரச்சனை இல்லை.

இங்கேயும் உடலின் எதிர்ப்பு ஆற்றல் கொரோனாவை தோற்கடித்துவிடுகிறது என்பதுதான் நல்ல செய்தி. கொரோனா வைரசுக்கு தடுப்பூசி கண்டுபிடித்து விடுவார்களா? என்பது தெரியவில்லை. 35 ஆண்டுகளுக்கு முன் வந்த எய்ட்ஸ் நோய்க்கு இன்னும் தடுப்பூசி கண்டுபிடிக்கப்படவில்லை. அந்த எச்ஐவி வைரசும் கொரோனா வைரஸ் ரகத்தை சேர்ந்ததுதான். அதுவும் நமது உடலின் எதிர்ப்பு ஆற்றலை கதிகலங்க வைக்கும் வைரஸ்தான்.

ஆனால், கொரோனா மாதிரி எச்ஐவி வைரஸ் மூலம் இவ்வளவு சாதாரணமாக இருமல், தும்மல் மூலம் எல்லாம் பரவவில்லை. அந்த வகையில் கொரோனதான் கொடூரம். அதற்குத் தான் வீட்டி லேயே முடங்கச் சொல்கிறார்கள். இன்னும் மருந்து கண்டுபிடிக்க இயலாத நிலையில், இந்த நோயில் இருந்து தப்பிப்பதே உசிதம். இந்த நோய்த் தாக்கு தலைத் தவிர்ப்பதே இதற்கான இப்போதைய ஒரே மருந்து!

தனித்திருப்போம்! விழிப்புடன் இருப்போம்!! வீட்டிலேயே இருப்போம்!!! கொரோனாவை ஒழிப்போம்!!!! ●

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அருகே உள்ள ‘பழையாறை’ கி.பி. 7, 8 ஆம் நூற்றாண்டுகளில் சோழர்கள் தலைநகராக விளங்கிய ஊராகும். இப்போது அப்பகுதியில் “சோழன்மாளிகை” என்ற ஊரில் தொல் தமிழர்களின் சுடுமண் பானைகள், உறை கிணறு, பெண்களின் ஒப்பனைப் பொருட்கள், கருப்பு சிவப்பு வண்ணப் பூச்சுள்ள பானைகள் எனப் பல வரலாற்றுச் சின்னங்கள் கிடைத்துள்ளன.

அப்பகுதியைச் சேர்ந்த திரு.கலியபெருமாள் மற்றும் தமிழ்த்தேசியப் பேரியக்கத் தோழர்கள் பிரபு, தீந்தமிழன் ஆகியோர் குடந்தை வட்டாட்சியர், கிராமநிர்வாக அலுவலர் ஆகியோருக்கு உடனடியாகத் இத்தகவலைச் சொல்லி ஆய்வு செய்வதற்குரிய பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர். அத்துடன் திருச்சி, தஞ்சையில் உள்ள தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறைக்கும் உரியவாறு தகவல் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால் இன்று வரை தமிழ்நாடு அரசுத் தரப்பிலிருந்து எந்த அசைவும் இல்லை அந்த நால்வழிச் சாலை போட ஒப்பந்தம் எடுத்துள்ள குசராத்தை சேர்ந்த பட்டேல் நிறுவனம், தொல்பொருட்கள் கிடைத்த குழிகள் மீது மேலும் மேலும் மண் போட்டு நிரப்பி மூடி வருகிறது.

இந்நிலையில் திருவாரூர் நடுவண் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக உள்ள பேராசிரியர் ச.இரவி அவர்களுக்கு பிரபு, கலியபெருமாள், தீந்தமிழன் ஆகியோர் தகவல் கொடுத்து அழைத்து வந்து மேற்படி இடங்களைக் காட்டினார்கள்.

பேராசிரியர் ச.இரவி அவர்கள் அந்த இடங்களையும், கிடைத்த தொல் பொருட்களையும் பார்த்துவிட்டு, இவை இடைக்காலச் சோழர்களின் தலைநகரமாகப் பழையாறை விளங்கிய காலத்தில் அதாவது கி.பி ஏழாம் நூற்றாண்டு வாக்கில் வாழ்ந்தவர்கள் பயன்படுத்திய பொருளாக இருக்க வேண்டும். அதே வேளை, கருப்பு சிவப்பு வண்ணம் பூசப்பட்ட சுட்ட மண்பானை கிடைத்திருப்பதால், இடைக்காலச் சோழர் காலத்திற்கு முந்திய காலத் தொல் தமிழர் நாகரிகச் சின்னங்களாகவும் இவை இருக்கலாம் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக இதில் கவனஞ் செலுத்தி தமிழ் மொழி, தமிழ் இனம் ஆகியவற்றின் வரலாற்றுச் சின்னங்கள் மீது உண்மையான அக்கறையுள்ள - நேர்மையான - ஆய்வாளர் குழுவை அனுப்பி ஆய்வு செய்ய ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். (தமிழர்களின் சங்க கால இலக்கியங்களும் திருக்குறள் – சிலப்பதிகாரம் போன்றவையும் சமற்கிருத நூல்களிலிருந்து காப்பி அடித்து எழுதப் பட்டவை என்று நூல்கள் வெளியிட் டுக்கொண்டிருக்கும் மேனாள் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறைத் தலைவர் இரா. நாகசாமி போன்றவர்களையோ, அவர்களின் பரிந்துரை பெற்றோரையோ அனுப்பாமல் எச்சரிக்கையாக இருக்கும்படி முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.)






# சேது சமுத்திரத் திட்டம் 150 ஆண்டு வரலாறு!

1860இல் இந்த நாடு அடிமைப்பட்டுக் கிடந்த நேரத்தில் இங்கிலாந்து நாட்டின் கப்பல்படையின் தலைவர், கமாண்டர் டெய்லர் தமிழகத்திற்கு வந்தார். சேது சமுத்திரத் திட்டத்திற்காக ஆய்வு அறிக்கை ஒன்றைத் தயாரித்தார். 1860இல் தயாரித்த அறிக்கை செயல்படுத்தப்பட்டதா என்றால் செயல்படுத்த முடியவில்லை. இங்கிலாந்திலிருந்து டவுன் ஷெட் என்ற வல்லுநர் ஒருவர் வந்தார். 1862இல் அவர் நல அறிக்கை தயாரித்தார். செயல்படுத்த முடியவில்லை. இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்றக்குழு வந்தது. சேது சமுத்திரத் திட்டத்திற்காக தயாரித்த அறிக்கைகள் அளிக்கப்பட்டன.

1863இல் தமிழக கவர்னர் சர்.வில்லியம் டென்னிசன் ஒரு அறிக்கையினைத் தயாரித்தார். அந்த அறிக்கை படிக்கப்பட்டதே ஒழிய பயன்படுத்தப்படவில்லை. 1860லிருந்து 1945 வரை பிரிட்டிசுக்காரர்கள் ஆண்டபோது தொடர்ந்து அறிக்கைகள் தயாரிக்கப்பட்டனவேயன்றி உருப்படியான திட்டம் மேற்கொள்ளப்படவில்லை.

1955இல் சர்.ஏ.ராமசாமி முதலியார் ஒரு திட்ட அறிக்கையைத் தயாரித்தார். என்ன திட்டம் என்றால் தூத்துக்குடித் துறைமுகம் வேண்டும். அதே நேரத்தில் சேது சமுத்திரத் திட்டமும் வேண்டும். அப்போது திட்டத்தின் மொத்த மதிப்பீடு 8 கோடியே 18 லட்சம் ரூபாய். இந்தத் திட்டம் பொருளாதார ரீதியாக கைவிடப்பட்டது.

1983இல் லட்சுமி நாராயணன் குழு அறிக்கை தயாரித்த பொழுது, சேது சமுத்திரத் திட்டத்திற்கு மட்டுமே 282 கோடியில் ஒரு திட்டத்தைத் தயாரித்தது. அந்தத் திட்டம் என் செயல்படுத்தப்படவில்லை என்றால் இது இலாபகரமானது அல்ல என்ற சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு 1996ல் தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆட்சியில் பல்லவன் போக்குவரத்துத்துறை வல்லுநர்களை வைத்து செய்த திட்ட மதிப்பீடு ரூபாய் 746 கோடியாகும்.

### பழங்காலத்தில் கப்பல் போக்குவரத்து

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னால் சோழ நாட்டில் பூம்புகாரில் பாண்டிய நாட்டு கொற்கைத் துறைமுகத்தில் ரோமானியர்கள் உட்பட பிற நாட்டினர் வந்து சென்றார்கள். பண்ட மாற்றம் வணிகம் செய்தார்கள் என்பதனை வரலாற்றில் படித்திருக்கிறோம். அதேபோல 1000 ஆண்டுகளுக்கு முன்னால் இராஜ இராஜசோழன், கடல் கடந்து கடாரம் வென்றான். கப்பல் பயணம் எங்கே நின்றது, யார் தடுத்தது, எதனால் நின்று போனது? கடல் வாணிபம் எங்கே? கப்பல் படைகள் எங்கே? என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன்றைய தமிழ்ச் சமுதாயம் தங்கள் பண்டைய நாகரிகத்தையும் கலாச்சாரத்தையும் தெரிந்து கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் கலைஞர் அவர்கள் பூம்புகாரை நிறுவி வரலாற்றில் மட்டுமே படிக்கக்கூடிய ஒன்றை மீண்டும் புதுப்பித்து நினைவூட்டினார்.

திராவிட சுயமரியாதை இயக்கங்களின் பங்களிப்பு சேது சமுத்திரத் திட்டம் பொருளாதார வளர்ச்சிக்கு

உரிய திட்டம். இந்தத் திட்டத்திற்காக இன்றல்ல நேற்றல்ல 88 ஆண்டு கால திராவிட இயக்க வரலாற்றில் 33 ஆண்டு காலம் சுயமரியாதை இயக்கங்கள் நடத்திய மாநாடுகளில் பேசியது, தீர்மானம் போட்டது, 55 ஆண்டு காலமாக அறிஞர் அண்ணா அவர்கள், கலைஞர் அவர்கள் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலராலும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. 1960இல் அக்டோபர்த் திங்கள் 9ஆம் நாள் தமிழகத்தின் சட்டசபையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி விரிவாக அறிஞர் அண்ணா அவர்கள் சேது சமுத்திரத்திற்காகக் குரல் கொடுத்ததை யாரும் மறந்து விட முடியாது.


1961இல் நடைபெற்ற திருப்பரங்குன்றம் மாநாட்டில் தீர்மானமாக வடித்தார் கலைஞர் அவர்கள். 1967இல் விருகம்பாக்கம் மாநாட்டில் சேது சமுத்திரத் திட்டம் வேண்டும் என்று குரல் கொடுத்தவர் கலைஞர் அவர்கள். அதைத் தொடர்ந்து 1967 சூலைத் திங்கள் மூன்றாம் நாள் அறிஞர் அண்ணாவால் அறிவிக்கப்பட்ட எழுச்சி நாள் கொண்டாடப்பட்டு சேலத்தில் உருக்காலைக்காக கலைஞர் அவர்கள் குரல் கொடுத்தார். தூத்துக்குடி துறைமுகத்திற்காக வாதாடினார். சேது சமுத்திரத் திட்டத்திற்கு மீண்டும் மீண்டும் குரல் கொடுத்து வந்தார்.

அன்றைக்குப் பாதியில் நிறுத்தப்பட்ட தூத்துக்குடி துறைமுகத் திட்டம் மீன்பிடி துறைமுகமாக மாற்றப்படும் என்று அறிவித்த அன்றைய அமைச்சர் வி.கே.ஆர்.வி.ராவ் தன்னுடைய கருத்தை மாற்றிக் கொண்டு ஆழ்கடல் துறைமுகமாக மாற்றி அமைக்க தலைவர் கலைஞர் அவர்களின் நேரிடைச் சந்திப்பு காரணமாக அமைந்தது. கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு சேது சமுத்திரத் திட்டம் மிக வேகமாகவும் சிறப்பாகவும் நிறைவேற்ற மத்தியக்கடல் மற்றும் தரைவழி போக்குவரத்து அமைச்சகம் உறுதி பூண்டது.

### சேது சமுத்திரத் திட்ட நன்மைகள்

ஏறத்தாழ தூத்துக்குடித் துறைமுகம் நாடுகளுடன் போட்டி போடக்கூடிய அளவிற்கு மிகப்பெரிய துறைமுகமாக அமையும். இதனால் என்ன நன்மை? 400 கி.மீ. பயணம் குறையும். 36 மணி நேரப் பயணம் குறையும். அந்நியச் செலாவணி செலவு குறையும். இன்றைக்கு இலங்கை நட்பு நாடாக இருக்கிறது. இந்த நட்பு நாடு தெரிந்தோ தெரியாமலோ ஏதோ வல்லரசோடு சிக்கிக் கொண்டு அந்த வல்லரசின் நட்பு நாடாக ஆகி அந்த வல்லரசு நமக்கு எதிர்ப்பு நாடானால் என்ன நிலைமை? நமது யுத்தக் கப்பல்கள் செல்ல இடம் வேண்டாமா? நீர் வழித்திட்டம் வேண்டாமா? இந்த நாட்டின் பாதுகாப்புக்காவது இந்தத் திட்டம் வர வேண்டும்.

நமது யுத்தக் கப்பல்கள் மேற்கு திசையிலிருந்து கிழக்கு திசைக்கும் கிழக்கு திசையிலிருந்து மேற்குத் திசைக்கும் போவதற்கு இலங்கையைச் சுற்றிக் கொண்டு 400 கி.மீ.போக வேண்டிய அவசியம் இல்லை.




### சுற்றுச்சூழல் மற்றும் மீனவர் தொழில் பாதுகாப்பு

மீனவர்களுக்காக புதிய திட்டம் ஒன்று தயாரித்து தொண்டியில் மீன்பிடித் துறைமுகம் ஒன்று நிறுவப்படும். மீன்பிடி எல்லை தீர்மானிக்கப்பட்டு படகு உரிமையாளர்கள் அப்பகுதி அதிகாரிகள் பிரத்தியேக மீனவர்கள் குழு ஒன்று ஏற்படுத்தப்படும். மீன்பிடிப் பகுதி எல்லை 175 கடல் மைல்களாக அறிவிக்கப்படும். கடலோர பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் செயல்படுவார்கள். பனாமா மற்றும் சூயஸ் கால்வாய்த் திட்டங்களின் அனுபவங்களும் கருத்தில் கொள்ளப்படும். பவளப் பாறைகள் வளர்ச்சி, கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படாத வகையில் சுற்றுச்சூழல் மாசு படாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கால்வாய் ஆழப்படுத்தப்படும்போது புதிய மீன் வகைகள் வரவு மற்றும் பவளப் பாறைகள் வளர்ச்சி ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இந்தியத் துறைமுகங்களுக்குச் செல்ல வேண்டிய கப்பல்கள் இலங்கையைச் சுற்றி வர வேண்டியது இருக்காது. இப்போது ஐரோப்பிய, அமெரிக்க, ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து சரக்குகளை ஏற்றிவரும் பெரிய கப்பல்கள் இந்தியத் துறைமுகங்களுக்கு வருவதைத் தவிர்க்கின்றன. அவைகள் கொழும்புத் துறைமுகத்தில் சரக்குகளை இறக்கிவிட்டு சென்று விடுகின்றன. அங்கிருந்து வேறு சிறிய கப்பல்கள் மூலம் அவை இந்தியத் துறைமுகங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. அந்தக் குறைகள் நீங்கும். வங்கக்கடல் துறைமுகங்கள் பெரும் வளர்ச்சி பெறும். இதனால் கிழக்குத் கடற்கரையில் உள்ள தூத்துக்குடி, சென்னை, எண்ணூர், விசாகபட்டினம், ராமேஸ்வரம், உள்ளிட்ட பெரிய துறைமுகங்கள் மட்டும் அல்லாமல் கடலூர், நாகபட்டினம், மசூலிப்பட்டினம் போன்ற சிறிய துறைமுகங்களும் பலன் பெறும். கடல் பயணத்தில் 400 கடல் மைல் தூரம் குறையும். 36 மணிநேரம் கடல் பயணமும் குறையும். தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி பெருகி பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். ●

# கருணாஸ் எம்.எல்.ஏ., பா.ச.க.வில் இணைகிறாரா?

## கருணாஸ் நேர்காணல்

குஷ்புவைத் தொடர்ந்து தமிழகத்தின் தென் கோடியில் இருக்கும் திமுக, காங்கிரஸ் கட்சிகளின் எம்எல்ஏக்கள் இருவர், நடிகர்கள் விஷால், கருணாஸ் உள்ளிட்டோரும் கமலாலயத்தின் கதவுகளைத் தட்டவிருப்பதாக சமூக வலைதளங்களில் செய்திகள் தடதடக்கும் நிலையில், “இறுதி மூச்சு வரை எனது சமுதாய மக்களின் நலனுக்காக முக்குலத்தோர் புலிப் படை இயக்கத்தை நடத்துவேன், அதைக் கலைத்து விட்டு இன்னொரு இயக்கத்தில் சேர்வது என்ற பேச்சுக்கே இடமில்லை'' எனச் சூளுரைக்கிறார் கருணாஸ் எம்எல்ஏ.

இதுகுறித்து 'இந்து தமிழ்' இணையதளத்துக்கு அவர் அளித்த பேட்டியில் இருந்து...

**குஷ்புவைத் தொடர்ந்து பாஜகவுக்குப் படையெடுக் கும் நட்சத்திரப் பட்டாளத்தில் உங்களது பெயரும் உரக்கக் கேட்கிறதே... நெருப்பு இல்லாமலா புகையும்?**

நடிகர்கள் குஷ்பு, வடிவேலு மாதிரிக் கூட்டம் சேர்ப்பதற்காகத் தேடப்படும் சினிமா நடிகன் இல்லை நான். முக்குலத்தோர் சமுதாய மக்களின் அரணாக முக்குலத்தோர் புலிப்படை என்ற இயக்கத்தை நடத்திக் கொண்டிருப்பவன். எனது கடந்த கால செயல்பாடு களைப் பார்த்துவிட்டுத்தான் பிற முக்குலத்தோர் கட்சிகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு எனக்குத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்தார் ஜெயலலிதா. குஷ்பு, வடிவேலு போல நான் தனிப்பட்ட நடிகனாக மட்டும் இருந்திருந்தால் நமக்கும் ஏதோ ஒன்று கிடைக்கும் என நினைத்து எளிதாக இன்னொரு கட்சிக்குப் போய் விட முடியும். ஆனால், நான் அப்படிப் போக முடியாது. அப்படி இன்னொரு கட்சியில் இணைவதற்கான அவசியமோ நிர்ப்பந்தமோ எனக்குத் துளியும் கிடை யாது. எனது இறுதி மூச்சுவரை எனது இயக்கத்தை நடத்தி எனது சமுதாய மக்களுக்கான நலன்களை வென்றெடுப்பேன்.

**அப்படியானால் ‘பாஜகவில் இணைகிறார் கருணாஸ்’ என்ற செய்தி எங்கிருந்து கிளம்பியது?**

கடந்த ஒரு வருட காலமாகவே பாஜக தலைவர்கள் பலரும் என்னைத் தொடர்புகொண்டு பேசி





வருகிறார்கள். அதிலும் முக்கியமாகத் தென் மாநிலப் பொறுப்பில் இருப்பவர்கள் என்னுடன் அடிக்கடி பேசினார்கள். ஒரு அரசியல் கட்சியை வளர்க்க நினைப்பவர்கள் எங்களைப் போன்ற பத்து பேரைத் தங்கள் இயக்கத்தில் இணைக்க நினைப்பது இயல்பான ஒன்றுதான். அதுதானே அவர்களது வேலை.

அப்படி என்னை டெல்லிக்கு அழைத்தவர்களிடம் "ஐயா... எனக்கென்று மூன்று முக்கியக் கோரிக்கைகள் இருக்கின்றன. மதுரை விமான நிலையத்துக்கு பசும்பொன் தேவர் பெயரைச் சூட்ட வேண்டும் என்பது முக்குலத்து மக்களின் நீண்ட நாளைய கோரிக்கை. அதுபோல, நந்தனத்தில் தேவர் சிலையைத் திறந்து வைத்த ஜெயலலிதா, கள்ளர், மறவர், அகமுடையார் சாதிகளை ஒருங்கிணைத்து தேவர் சமூகம் என அறிவித்தார். இதற்கான அரசாணை பிறப்பிக்கப் பட்டும் அது நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது.

அந்த ஆணை நடைமுறைக்கு வந்திருந்தால் முக்குலத்தோர் இளைஞர்களுக்குக் கல்வி வேலை வாய்ப்பில் உள் இட ஒதுக்கீடு கிடைத்திருக்கும். இதை நடைமுறைப்படுத்த மாநில அரசுக்கு மத்திய அரசு உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும். அடுத்ததாக, வெள்ளையர்களை எதிர்த்து 16 ஆண்டு காலம் ஆயுதம் ஏந்திப் போராடிய மருது சகோதரர்களைக் கவுரவிக்கும் விதமாக நாடாளுமன்ற வளாகத்தில் அவர்களின் திருவுருவச் சிலை நிறுவப்பட வேண்டும்.

இந்த மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டிய இடத்தில் மத்திய அரசு இருக்கிறது. எனவே, இது தொடர்பான கோரிக்கை மனுவை அளிக்க உள்துறை அமைச்சர் உள்ளிட்ட பாஜக தலைவர்களை நான் எந்த நேரத்திலும் சந்திக்கத் தயாராய் இருக் கிறேன்" என்று தெளிவாகச் சொன்னேன். 'தாராளமாய் வந்து உங்கள் கோரிக்கைகளை மனுவாகக் கொடுங்கள்' என்றார்கள். ஆனால், அப்படிச் சொன்னவர்கள்தான், நான் பாஜகவில் இணையப் போவதாகத் திரித்து செய்தி பரப்பிவிட்டார்கள்.

**உங்களை டெல்லிக்கு அழைத்த அந்தத் தலைவர் யார்?**

பாஜகவின் தென் மாநிலப் பொறுப்பில் இருப்பவர்தான். அவரின் பெயரை நான் சொல்வது நாகரிகமாக இருக்காது. இருந்தாலும் இப்படிச் செய்திகள் வெளியானதுமே சம்பந்தப்பட்ட மனிதரை போனில் அழைத்து, "உங்கள் தரம் இவ்வளவு தானா" என்று சற்றுக் கோபமாகவே பேசிவிட்டேன். அதற்கு, "இந்த செய்திக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை" என்றார்கள். அவர்களால் அப்படித்தானே சொல்ல முடியும்.

**ஆளும் அதிமுக அரசு மீது மக்கள் மத்தியில் பெரிதாக அதிருப்தி ஏதும் இல்லை என்று சொல்லி இருக்கிறீர்களே..?**

உண்மைதான்... ஐந்து ஆண்டுகள் ஆட்சி நடந் தாலே ஆளும்கட்சி மீது மக்களுக்கு அலுப்பும் சலிப்பும் வந்து விடும். ஆனால், தமிழகத்தில் கிட்டத்தட்டப் பத்து ஆண்டுகளாகத் தொடரும் அதிமுக அரசு மீது மக்களுக்குப் பெரிதாக அதிருப்தி ஒன்றும் இல்லை என்பது எனது தனிப்பட்ட கருத்து.

**அப்படியானால் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கும் இந்த ஆட்சியே தொடரும் என்கிறீர்களா?**

அதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் இப்போதுள்ள அரசியல் களம் அப்படி இருக்கிறது. அதிகாரத்தைப் பிடிக்க நினைப்பவர்கள் என்ன விலை கொடுத்தாவது அதை அடைய நினைக்கிறார்கள். "தேசத்துக்காகக் கொடுப்பவன் தேசியவாதி... தேசத்திலி

ருந்து எடுப்பவன் அரசியல்வாதி" என்று தேவர் அன்றே சொன்னார். அதை நாம் இப்போது கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

லஞ்ச லாவண்யத்தை எழுதப்படாத சட்டமாகவே ஆக்கிவிட்டார்கள். இதில் யாரும் சளைத்தவர்கள் இல்லை. இவர்களுக்கு அவர்கள் தேவலாம் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறதே தவிர யாரையும் தேசத்தை நேசிக்கும் தேசியவாதிகளாக நினைத்துப் பொறுப்பை ஒப்படைக்க முடியவில்லை. இதனால் சட்டப்பேரவை உறுப்பினர்களாகிய எங்களாலேயே நியாயப்படி வேலை செய்ய முடியவில்லை. எனவே, எதிர்கால அரசியல் எப்படிப் போகும் என்று இப்போதைக்கு எனக்குச் சொல்லத் தெரியவில்லை.

**இபிஎஸ் அரசை ஆதரிக்கும் நீங்கள் சசிகலாவுக்கு ஆதரவாகவும் கருத்துகளைத் தெறிக்கவிடுகிறீர்களே?**

முக்குலத்தோர் சமூகத்தைச் சார்ந்த எம்எல்ஏ, எம்பிக்கள் அவர்களின் கட்சிக்குக் கட்டுப்பட்டுத்தான் பேசுவார்கள். தனது சமுதாய மக்களுக்கு ஒன்று என்றால்கூட அவர்களால் வெளிப்படையாக ஆதரவுக் குரல் எழுப்ப முடியாது. ஆனால், நான் அப்படி அல்ல. எனது சமுதாய மக்கள் எந்த இடத்தில் பாதிக்கப் பட்டாலும் அவர்களுக்காகக் குரல் கொடுப்பேன். திமுக, அதிமுக உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளிலும் இருக்கும் மக்கள் பிரதிநிதிகளின் நியாயமான கோரிக்கைகளுக்காக இந்த கருணாஸ் தயங்காமல் குரல் கொடுப்பான்.

அந்த வகையில், முக்குலத்தோர் சமுதாயத்தின் முக்கிய அடையாளமாக இருக்கும் சின்னம்மாவுக்கு முக்குலத்தோர் புலிப்படை என்றைக்கும் ஆதரவாக இருக்கும். எனக்குத் தேர்தலில் போட்டியிட வாய்ப் பளித்து என்னையும் ஒரு எம்எல்ஏவாக்கியது ஜெயலலி தாவாக இருந்தாலும் என்னை முன்னிலைப்படுத்தி யதில் சின்னம்மாவின் பங்கும் இருக்கிறது.

**சசிகலா விடுதலையாகி வெளியில் வந்தால் அதிமுக அவரது கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிடும் என்று சொல்லப் படுவது பற்றி..?**

கிரிக்கெட் விளையாட்டில் நல்ல விளையாட்டு வீரர்கள் மட்டும் இருந்தால் போதாது. அவர்களை வழிநடத்தத் திறமையான கேப்டனும், ஆடுவதற்கு ஏற்ற களமும் அமைய வேண்டும். எனவே, வரக்கூடிய காலங்களில் களம்தான் சின்னம்மாவுக்கான இடத்தைத் தீர்மானிக்கும். அதேசமயம், "சசிகலா அதிமுகவின் ரத்த அணுக்களில் கலந்திருக்கிறார்" என்று சுப்பிரமணியன் சுவாமி சொன்னதை மறுக்க முடியாது.

ஜெயலலிதா இருக்கும் காலத்திலேயே முக்கிய முடிவுகளை எடுக்கும் இடத்தில் சின்னம்மா இருந்தார் என்பது இன்றைக்கு இருக்கும் பலருக்கும் தெரியும். சின்னம்மா அதிமுக பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டதைப் புகழ்ந்து பேசியவர்களை எல்லாம் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இப்போது மாற்றிப் பேச வைத்திருக்கிறது. நாளைக்கே சின்னம்மா விடுதலை யாகி வெளியில் வந்து கட்சி சம்பந்தமாக ஒரு முடிவை எடுத்தால் அதற்குப் பெரிய அளவில் வரவேற்பு இருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

**முக்குலத்தோர் புலிப்படையின் எதிர்காலத் திட்டம்தான் என்ன?**

சராசரி அரசியல்வாதிகளைப் போல் இல்லாமல் மற்ற சமுதாயங்களையும் அரவணைத்து முக்குலத்துச் சமூகத்துக்கான நலன்களை சாதித்துக் கொடுக்க வேண்டும் என்பதுதான் எங்களது ஒரே லட்சியம். சுருக்கமாகச் சொல்வதானால், மூச்சு நின்ற பிறகும் வாழவேண்டும். ஒரு மனிதன் இறந்த பிறகும் பேசப்பட வேண்டும் என்றால் அதற்கான சாதனையைச் செய்திருக்க வேண்டும். அப்படி ஏதாவது சாதிக்க, சிதறுண்டு கிடக்கும் எனது முக்குலத்துச் சொந்தங் களை எல்லாம் ஒரு குடையின் கீழ் கொண்டுவரும் பணிகளை முன்னெடுக்க இருக்கிறோம்.

நன்றி : தமிழ் இந்து ( 14.10.2020)




## கருணாஸ் மீது வழக்கு

கொரோனா ஊரடங்கை மீறி கூட்டம் கூட்டியதாக, எம்.எல்.ஏ., கருணாஸ் உள்பட, 75 பேர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். திருச்சி, தாராநல்லூரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பேனர் கிழித்தது தொடர்பாக, நேற்று முன்தினம் அப்பகுதிக்கு திருவாடனை எம்.எல்.ஏ., கருணாஸ் வந்து, அப்பகுதி மக்களை சந்தித்து பேசினார்.

கொரோனா ஊரடங்கு உத்தரவை மீறி, அதிக கூட்டம் கூட்டியதாக, காந்தி மார்க்கெட் போலீசில் புகார் அளிக்கப்பட்டது. எம்.எல்.ஏ., கருணாஸ், முக்குலத்தோர் புலிப்படை அமைப்பைச் சேர்ந்தவர்கள் என, 75 பேர் மீது, போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

முத்தையா முரளிதரன் பயோபிக்கைத் தவிர்க்கவும் என்று விஜய் சேதுபதிக்கு பாரதிராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முத்தையா முரளிதரன் பயோபிக்கில் விஜய் சேதுபதி நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். 800 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதனை படைத்திருப்பதால், முத்தையா முரளிதரன் பயோபிக் கதைக்கு '800' எனத் தலைப்பிட்டுள்ளது படக்குழு.

முத்தையா முரளிதரன் பயோபிக்கில் விஜய் சேதுபதி நடிக்கக் கூடாது என்று இலங்கைத் தமிழர்கள் சார்பில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. தொடர்ச்சியாக சமூக வலைதளத்திலும் இந்த எதிர்ப்பு எதிரொலித்து வருகிறது.

இயக்குநர் சீனு ராமசாமி, சேரன் உள்ளிட்ட பலரும் '800' படத்தில் நடிக்க வேண்டாம் என்று விஜய் சேதுபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


தற்போது, இயக்குநர் பாரதிராஜாவும் விஜய் சேதுபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக பாரதிராஜா விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"மக்களிடம் நல்ல பெயர் எடுப்பது ரொம்பக் கடினம். ஆனால், பொதுமக்கள் வெகு வேகமாகவே உங்கள் மீது அன்பைக் கொட்டியுள்ளனர். அதற்கு இயல்பான, யதார்த்தமான பேச்சும் கடைக்கோடி மக்களின் எண்ணப் பிரதிபலிப்புமே காரணம். இன்னும் நீண்டு செல்லும் இந்தப் பயணத்தில் மேலும் புகழ் பெறவே வாழ்த்துகிறேன்.

நிற்க.

தாங்கள் செய்யவிருக்கும் '800' என்ற படம் பற்றிக் கேள்விப்பட்டேன். இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனைப் பற்றிய பயோபிக் படமாக அது உருவாகப் போவதாக அறிந்தேன். நம் ஈழத்தமிழ்ப் பிள்ளைகள் செத்து விழுந்தபோது பிடில் வாசித்தவர் இந்த முத்தையா. சிங்கள இனவாதத்தை முழுக்க முழுக்க ஆதரித்தவர்.

விளையாட்டு வீரனாக என்னதான் சாதித்தாலும், தன் சொந்த மக்கள் கொல்லப்பட்டபோது சிரித்து மகிழ்பவர் என்ன சாதித்து என்ன பயன்?. எத்தனையோ துரோகங்களை எம்மினம் கடந்து வந்துள்ளது. எங்களைப் பொறுத்தவரை முத்தையா முரளிதரனும் ஒரு நம்பிக்கைத் துரோகிதான். அடிபட்ட வலியை நினைவுகூரும் மக்கள் என்னிடம், ஏன் நம்ம விஜய் சேதுபதி அதில் நடிக்கிறார்? மறுத்திருக்கலாமே... எனக் கேட்கின்றனர்.







# முத்தையா முரளிதரன் பற்றிய 800 திரைப்படத்தில் விஜய்சேதுபதி நடிக்கக் கூடாது!

## இயக்குநர் பாரதி ராஜா வேண்டுகோள்

அவர்களின் வேதனையும் வலியும் புரியும் அதேசமயம் அவர்கள் உங்கள் மீது வைத்திருக்கும் அன்பையும் என்னால் காண முடிந்தது. உலகெங்கிலும் வாழும் தமிழர்களின் சார்பாக நான் கோரிக்கை வைக்கிறேன். இனத்துரோகம் செய்த ஒருவரின் முகம் காலங்காலமாக உங்கள் முகமாக வெறுப்போடே எம் மக்கள் பார்க்க வேண்டுமா?

எந்த வகையிலாவது தமிழின வெறுப்பாளனின் வாழ்வியல் படத்தில் நடிப்பதைத் தவிர்க்க முடியுமா பாருங்கள். தவிர்த்தால் எப்போதும் எம் ஈழ மக்களின் மனதிலும், என் மனதிலும் நன்றியோடு நினைவு கொள்ளப்படுவீர்கள்.

பின்குறிப்பு: '800' திரைப்படத்தை எடுக்க இருக்கும் Dar media நிறுவனம் நேற்று மாலை ஒரு அறிக்கை வெளியிட்டதை அறிந்தேன்.

800 திரைப்படம் அரசியல் படமில்லை. ஒரு விளையாட்டு வீரனின் வாழ்க்கை வரலாற்றை மட்டுமே படமாக்க இருக்கிறோம். இந்த திரைப்படம் எடுத்தால் பல ஈழத்தமிழர் திரைக் கலைஞர்கள், தொழில் நுட்பக் கலைஞர்களின் திறமை உலக அரங்கில் வெளிக் காட்ட அடித்தளமாக இருக்கும் என்று வெளியிட்டு இருந்தீர்கள்.

துரோகிக்குத் துணை போகும் உங்களை நினைத்துக் கோபப்படுவதா ? இல்லை உங்கள் அறியாமையைக் கண்டு சிரிப்பதா ? அனைத்துத் துறைகளிலும் உலக அரங்கில் தமிழர்களின் பங்களிப்பு என்னவென்று வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். பாடம் சொல்லும். ஒரு செய்தியை அழுத்தமாக இங்கு பதிவிட விரும்புகிறேன்.

உங்களுக்கு வேண்டுமானால் முத்தையா முரளிதரன் சிறந்த விளையாட்டு வீரனாக இருக்கலாம். எங்களைப் பொறுத்தவரை அவர் இனத் துரோகி. துரோகிகளை ஒரு போதும் தமிழினம் மன்னிக்க இயலாது. ஒரு போராளியின் தியாகம் , ஆயிரம் முத்தையா முரளிதரன் வந்தால் கூட ஈடு செய்யமுடியாது.

உண்மையிலேயே நீங்கள் தமிழர்களின் திரைக் கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்களின் திறமையைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினால், அகிம்சை வழியில் போராடி தீயாக இன்றும் சுடர் விட்டுக் கொண்டிருக்கும் தம்பி திலீபனின் வாழ்க்கை வரலாறு, அல்லது எங்கள் மக்களுக்காகத் தன்னையே உயிராயுதமாக உருக்கி எம் மண்ணோடு, காற்றோடு, கலந்த போன பல்லாயிரக்கணக்கான போராளிகளில், ஒரு மாவீரனின் வாழ்க்கை வரலாற்றை , உலக அரங்கில் எடுக்க முன் வா... ஒட்டுமொத்தத் தமிழர்களும், திரைத் துறையினரும் இலவசமாகப் பணியாற்றக் காத்திருக்கிறோம்".

இவ்வாறு பாரதிராஜா தெரிவித்துள்ளார்.

## மருத்துவ படிப்பில் இடஒதுக்கீடு தொடர்பான வழக்கு விசாரணையின் போது கண்கலங்கிய நீதிபதி!



அரசு பள்ளிகளில் பயின்று நீட் தேர்வு எழுதி மருத்துவப் படிப்புகளில் சேர இருக்கும் மாணவர்களுக்கு உள் இடஒதுக்கீடாக 7.5 சதவீதம் வழங்க வேண்டும் என்ற சட்ட மசோதாவை இந்த வருடமே அமல்படுத்த வேண்டும் என்று மதுரையைச் சேர்ந்த மருத்துவர் ராமகிருஷ்ணன் உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு தொடரந்திருந்தார்.

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தபோது அரசு தெரிவித்த தகவல்களைக் கேட்ட மதுரை நீதிமன்ற நிர்வாக நீதிபதி கிருபாகரன் கண்கலங்கினார். இன்றைய வழக்கு விசாரணையின் போது பேசிய அவர், "கிராமப்புற மாணவர்களின் வருத்தங்களும், வேதனைகளும் அளவிட முடியாதது. அவர்கள் தாங்கள் மருத்துவராகி கிராமப்புற மக்களுக்கு மருத்துவ சேவை புரிய வேண்டும் என்ற கனவோடு படிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய இடஒதுக்கீட்டை அரசு மறுக்கிறது என்பது மிகவும் வேதனைக்குரியது" என்று கண்கலங்கியபடி தனது கருத்தை தெரிவித்தார்.

நீட் தேர்வு முடிவுகளை வெளியிடுவதற்கு முன்பாகவே இடஒதுக்கீடு தொடர்பான சட்ட மசோதாவை அமல்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இந்த மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் தமிழக அமைச்சரவை இந்த மசோதாவை தமிழக ஆளுநரின் பரிசீலனைக்கு அனுப்பி யுள்ளது. தற்போது வரை அந்த சட்ட மசோதா ஆளுநரின் பரிசிலனையில் தான் உள்ளது.

எனவே இது குறித்து ஆளுநரிடம் கேட்டு பதில் தெரிவிக்குமாறு, ஆளுநரின் செயலாளருக்கு நீதிபதி உத்தரவிட்டார். ஆனால் நீதிமன்றம் ஆளுநருக்கு உத்தரவிட இயலாது என்றும் காலக்கெடுவையும் விதிக்க இயலாது என்றும் தலைமை வழக்கறிஞர் தெரிவித்தார். அப்போது தான் நீதிபதி கண் கலங்கி இந்த கருத்தைத் தெரிவித்தார்.

இதனையடுத்து நீட் தேர்வு முடிவுகள் வெளியான பிறகு எப்போது மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வு நடக்கும்? மருத்துவக் கல்லூரி இடங்கள் தொடர்பான அறிவிப்பை தமிழக அரசு எப்போது வெளியிடும்? என்பது குறித்து அரசிடம் தகவல் பெற்று தெரிவிக்க உத்தரவிட்டு, இந்த வழக்கை இன்று மதியம் 1 மணிக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

வாழ்விடம், இரையின்றிப் பாறு கழுகு இனங்கள் அழிவின் விளிம்பில் உள்ளதால், மனிதர்களுக்கும், இயற்கைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

### சுகாதாரப் பணியாளன்

தென் அமெரிக்காவில் மஞ்சள் காமாலை, ஆப்பிரிக்கா மற்றும் இந்தியப் பகுதிகளில் சிக்குன் குனியா, ஆப்ரிக்காவில் எபோலா, தெற்கு ஆசியாவில் நிபா வைரஸ், தென்கிழக்கு ஆசியாவில் சார்ஸ், உலக அளவில் ரேபிஸ், தென்கிழக்கு ஆசியாவில் மலேரியா போன்ற வைரஸ்கள் காடுகளைச் சார்ந்தே உருவாகியுள்ளன. அதேபோல 1947ம் ஆண்டு உகாண்டாவில் உள்ள ஜிகா என்ற காட்டில் இருந்து 'ஜிகா' வைரஸ் உருவானது.

காடுகளில் உள்ள இறந்த விலங்குகளை மட்டுமே உண்டு மனிதர்களுக்கும், பிற விலங்குகளுக்கும் நோய் பரவாமல் காக்கும் பணியில் ஈடுபட்டு வருபவை பாறு கழுகு என்ற பிணந்தின்னிக் கழுகுகள். இவை காட்டின் 'சுகாதாரப் பணியாளர்' என்று இயற்கை ஆர்வலர்களால் அழைக்கப்படுகிறது.

இவை நோயால் பாதிக்கப்பட்டு இறந்த விலங்குகளை உண்டு, அதன் மூலம் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தி வருவது ஓர் இயற்கைச் சுழற்சியாகும். இப்படிக் காக்கும் பணியில் ஈடுபடும் கழுகுகள் தற்போது அழிவின் விழிம்பில் நிற்பது மனித குலத்திற் கும் இயற்கைக்கும் ஆபத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### அழிவின் விளிம்பில் கழுகுகள்

இதகுறித்து இயற்கை ஆர்வலரும் அருளகம் சுற்றுச்சூழல் அமைப்பின் செயலருமான பாரதிதாசன் கூறும்போது, 'உலகமெங்கும் 23 பெருங்கழுகு இனங்கள் உள்ளன. இந்தியாவில் 9 வகைகளும் தமிழகத்தில் வெண்முதுகு பாறு, கருங்கழுத்து பாறு, செம்முகப் பாறு, மஞ்சள் முகப்பாறு ஆகிய 4 சிறப்பினங்களும் காணப்படுகின்றன. இவை 99 விழுக்காடு அழிந்துவிட்டன என்பது வேதனைக்குரிய தகவல். தமிழகத்தில் காணப்படும் 4 வகைகளுமே தற்போது அழியும் தருவாயில் உள்ளன.

மாடுகளுக்குச் செலுத்தும் வலி நிவாரண மருந்துகள், இறந்த விலங்குகளின் மீது தெளிக்கப்படும் விஷம்





# வேகமாய் அழிந்து வரும் கழுகுகள்!

## மனிதர்களுக்கும் இயற்கைக்கும் ஆபத்து ஆய்வாளர்கள் எச்சரிக்கை!



ஆகியவற்றால் ஏற்பட்ட இரைப் பற்றாக்குறை இதற்கு முக்கியக் காரணமாகச் சொல்லப்படுகிறது. கழுகுகளின் அழிவு சுற்றுச்சூழலைச் சிதைத்து, இயற்கையை அழிவுப் பாதைக்குக் கொண்டுசெல்லும்" என்றார்.

**வாழ்விடமும், இரையும்**

கழுகு ஆராய்ச்சியாளர் எஸ்.சந்திரசேகரன் கூறும் போது, 'அழிவின் விளிம்பில் உள்ள பாறு கழுகுகள் தென்னிந்தியாவிலேயே தமிழகத்தில், நீலகிரி மாவட்டத் தில் தான் அதிகம் உள்ளன. குறிப்பாக இவை மாயாறு பகுதியைத்தான் தங்களது வாழ்விடமாகத் தேர்ந்தெடுத் துள்ளன.

இவை கூடு கட்டும் மரங்கள் பட்டுப் போய் உள்ள தைக் கவனிக்க வேண்டும். வனத்திற்குள் சீமைக் கரு வேலம் போன்ற அடர்ந்த மரங்களை அகற்ற வேண்டும். கழுகுகள் கூடு கட்டுவது, இனப்பெருக்கம் செய்வதன் விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.

பாறு கழுகுகளுக்கு இரை கிடைக்கும் வகையில் காட்டில் இறக்கும் விலங்குகளை உடற்கூறாய்வு செய்யக்கூடாது. இறந்த விலங்குகளுக்குத் தொற்று இல்லாத பட்சத்தில் அவற்றைப் புதைக்கவோ, எரிக்கவோ கூடாது. மழைக் காலம், வெயில் காலம், குளிர் காலம் போன்ற காலங்களில் பாறு கழுகுகளின் வாழ்வியல் முறை எப்படி உள்ளது? என்பதை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். பாறு கழுகுகளின் வாழ்விட மான நீர் மத்தி மரங்களை அதிகரிக்க வனத்திற்குள் நீர் வழிப்பாதைகளை ஏற்படுத்தி பசுமையைக் காக்க வேண்டும்" என்றார்.

**மனிதர்களால் இடையூறு**

இதுகுறித்து வனத்துறையினர் கூறும்போது, 'பாறு கழுகுகள் மாயாறு, சீகூர் வனப்பகுதிகளில் அதிகம் உள்ளன. ஆகவே, இந்தப் பகுதிக்கு நாங்கள் முக்கியத் துவம் கொடுத்து பாறு கழுகுகளைப் பாதுகாக்கும் வகையில் கண்காணிப்புப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். அதேபோல இனப்பெருக் கத்தின் விவரங்களையும் சேகரித்து வருகிறோம்.

ஆண்டுதோறும் மாணவர்களை வைத்து இந்தக் கழுகின் முக்கியத்துவத்தைப் பொதுமக்களுக்கு உணர்த்தி வருகிறோம். மேலும் மனிதர்கள் கழுகு களுக்கு இடையூறுகள் செய்வதையும் தடுத்து வருகி றோம். கழுகால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம்" என்றனர்.

*நன்றி : தமிழ் இந்து*

## கொரோனா தடுப்பூசியை உலகம் முழுவதும் கொண்டு சேர்ப்பது சவாலான விஷயம்

ஆய்வில் தகவல்

சர்வதேச அளவில் கொரோனா தொற்றால் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கையானது 4 கோடியை நெருங்கிக் கொண்டிருக்கக்கூடிய நிலையில், தொற்றுக்கு எதிராக தடுப்பூசி தயாரிக்கும் பணியில் உலக நிறுவனங்கள் மும் முரமாக ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், தயாரிக்கப் படும் தடுப்பூசியை உலகம் முழுவதும் விநியோகிப்பதில் சிக்கல் இருப்பது தற்போது தெரிய வந்துள்ளது.

தற்போது உள்ள நிறுவனங்களில் வெறும் 28 சதவிகி மான நிறுவனங்கள் மட்டுமே கொரோனா தடுப்பூசிகளைக் கையாளத் தயாராக இருப்பதாக தெரியவந்துள்ளது.

சர்வதேச சரக்கு விமான சங்கம் மற்றும் பார்மா.ஆரோ ஆகியோரால் நடத்தப்பட்ட இந்த கருத்துக் கணிப்பில் மேற் குறிப்பிட்ட தகவல்கள் கிடைத்துள்ளன. இந்த கணக்கெடுப் பில் பங்கேற்றிருந்த 181 நிறுவனங்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் தடுப்பூசியை நீண்ட தொலைவுக்கு கொண்டு செல்ல ஏற்றவாறு குளிர்சாதன வசதி கொண்ட போக்குவரத்து வாகனங்களை தயார் நிலையில் வைத்துள்ளன. ஆனால், ஏறக்குறைய கால் பகுதியினர் தாங்கள் இன்னும் இதுபோன்ற உபகரணங்களை வாங்க முயற்சிக்கிறோம் என்று கூறியுள் ளனர்.

உற்பத்தித் தளங்களிலிருந்து உலகெங்கிலும் உள்ள சுகாதார கிளினிக்குகளுக்கு மருந்தை கொண்டு சேர்ப்பதற்கு பொறுப்பானவர்களின் தயார்நிலை மிக முக்கியமானது, ஏனென்றால் ஒரு முறை போக்குவரத்துக்கு உட்பட்ட அளவுகள், உலக பொருளாதாரத்தில் பயணிக்கும்போது, அவை மிகவும் குளிராக இருக்க வேண்டும். தொற்று நோயின் தொடக்க காலத்தில் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களின் (PPE) பற்றாக்குறை எவ்வாறு இருந்தது என உலக நாடுகள் உணர்ந்திருந்தன. இந்நிலையில் இதுபோன்ற சிக்கல்கள் தவிர்க்கப்பட முன்னெச்சரிக்கையாக இருப்பது அவசிய மாகிறது.

'தளவாடத் தொழில் இன்று அல்லது எப்போதாவது எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் இதுதான்' என்று மியாமி சர்வதேச விமான நிலையத்தின் விமான வர்த்தக மற்றும் தளவாடங்களின் மேலாளரும், தியாகா என அழைக்கப்படும் சங்கத்தின் உறுப்பினருமான எமிர் பினெடா கூறியுள்ளார். 'விநியோகச் சங்கிலி பல இணைப்புகளால் ஆனது, அந்த இணைப்புகளில் ஒன்று உடைந்தாலும், எங்களுக்கு மிகப் பெரிய சிக்கல் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது.' என்றும் கூறியுள் ளார்.

கொரோனா தடுப்பூசியானது உலகம் முழுவதும் பரவலாக கொண்டு சேர்ப்பது பெரும் சவாலான விஷயம். தடுப்பூசியின் அளவானது ஒட்டு மொத்தமா 65,000 டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது 2019- ல் வான் வழியாக கொண்டு சேர்க்கப்பட்ட ஒட்டு மொத்த சரக்கு அளவை விட நான்கு மடங்கு அதிகம் என்றும் பினெடா கூறியுள்ளார்.

நன்றி : தமிழ் இந்து



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**

# 7 ஆம் ஆண்டாக

# திருவள்ளுவர் நாட்குறிப்பேடு

தி.பி. 2052 (2021)

- மொத்தமாக 400 பக்கங்கள்
- உள் பக்கங்கள் இரு வண்ண அச்சு
- ஒவ்வொரு நாளுக்கும் தனிப்பக்கம்!

- ஒவ்வொரு நாளுக்கும் ஒரு திருக்குறள்
- உலகு தழுவிய வரலாற்றுக்குறிப்புகள்
- தமிழர் அறம், தமிழ் இலக்கியங்கள் ஆகியவற்றின் மேற்கோள்கள்...


- தலைவர்கள், அறிஞர்கள் மேற்கோள்கள்
- தொன்மைத் தமிழ் ஆசான்களின் தமிழர் மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்கள் ஆகியோரின் கோட்டோவியங்கள்
- பல வண்ண மேலட்டை



**ஒரு குறிப்பேட்டின் விலை ரூ. 250/- 50 குறிப்பேடுகள் வாங்கினால் ஒன்றின் விலை ரூ. 200/-**

முன்பதிவுக்கான கடைசி நாள்

**30 அக்டோபர் 2020**




50க்கும் மேல் நாட்குறிப்புகள் வாங்குபவர்களின் அமைப்பு / நிறுவன விளம்பரம் அட்டைக்கு அடுத்தப் பக்கத்தில் அச்சிட்டுத் தரப்படும் 500 குறிப்பேடுகள் வாங்கும் நிறுவனங்களின் சின்னம் மேலட்டையில் பொறிக்கப்படும்.

தொடர்புக்கு : 044 24742911 / 98408 48594 / 94439 18095

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

